Computer Today

ஆனி - 2015

# கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

தகவல் தொழில்நுட்ப மாத இதழ்

விலை - 80/-



Dubsmash
கலக்கும்

கல்வித்திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி

Windows 10 இல்




EagleGet
All in One Downloader
Now with YouTube Grabber!
Download
இலவச மென்பொருட்கள்

python
இலகு வைத்தியன்

Signal
இல்லாத இடத்தில்
Cell Phone

தரம் 10 மாணவர்களுக்கான
ICT-SOLUTIONS
INFORMATION COMMUNICATION TECHNOLOGY

android
அன்ரொயிட்டின் அடுத்த பதிவு

நுளம்பைத் துரத்த அன்ரொயிட் மென்பொருள்

Xperia வரிசையில் Sony Xperia M4 Aqua



CYBER CRIME - ஒரு பார்வை




Teamviewer
என்ன என்பதை அறிய..

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை

வடக்கின் கணனிப் பூங்கா

intel

Northern
# PC PARK PVT (Ltd)

கணினி மற்றும்

உதிரிப்பாகங்களின்

விற்பனை முன்னோடிகள்

0777 570 124

nothernpcpark

info@pcpark.co

www.pcpark.com




hp DELL ASUS EPSON

SHOW ROOM 1 : #269E,Palaly Road, Kantharmadam,Jaffna. Tel: 021222 0388

SHOW ROOM 2 : #10, Muddaskadai Junction,Stanley Road, Jaffna. Tel :021 222 2050

# இதழினுள்ளே.....


அன்ரொயிட் இன் அடுத்த பதிப்பு.... – 03
Microsoft Security Essential... – 04
Secret Folder..... – 05
Cyber Crime ஒரு பார்வை..... – 06
கலக்கும் Dubsmash..... – 09
Windows 10 இல் Candy Crush.... – 10
ICT - தரம் 10...... – 11
EagleGet Downloader...... – 1 5
மொபைல் இணைய இணைப்பு...... – 16
Xperia வரிசையில் Sony........ – 18
Microsoft Office இற்கு மாற்றாக..... – 20
Signal இல்லாத இடத்தில் SMS.... – 21
எனதருமைக் கணினியே.... –கவிதை – 22
இலகு பைத்தன்.... –23
மின்னஞ்சல் முகவரியை பாதுகாக்க.... –25
செலுத்துகை ஊடகங்கள்.... –26
வலையோடி பதில்கள் .... –28
இலவச Accounting மென்பொருள்.... – 31
போட்டோக்களின் Capacity குறைப்பதற்கு – 32
laptop Over Heat ஆகிறதா?..... – 34
உலகின் சிறிய கணினிகள்.... – 35
Team Viewer அறியுங்கள்.... – 36
Ubuntu என்றால் என்ன?.... – 38
கணினி வகைகள் .... – 41
இணையம் அறிந்து கொள்வோம்.... – 44
நுளம்பினைத் துரத்த அன்ரொயிட்... – 47



## கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

அச்சிட்டு வெளியிடுபவர்கள் :

**Uthayan IT Island**

359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 021 5 677 600


**கம்ப்யூட்டர் ருடே யில் உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா ?**

359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
அல்லது
info@computertoday.lk
என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்

***வாசகர்களுக்கு வணக்கம்!***

தொடார்ச்சியாக மூன்றாவது 'கம்ப்யூட்டர் ருடே' இதழின் ஊடாக வாசகர்களாகிய உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

கடந்த இரண்டு இதழ்களிற்கும் தந்த ஆதரவினை உங்களிடம் இருந்து தொடர்ச்சியாக எதிர்பார்க்கிறோம்.

வாசகர்களாகிய உங்களிற்கும் எங்களிற்குமான உறவானது மிகவும் நொருக்கமானதும் இறுக்கமானதும் ஆகும். தபால், மின்னஞ்சல், தொலைபேசி என பலவழிகளில் இருந்துவந்த இந்த உறவானது தற்போது 'கம்ப்யூட்டர் ருடே'யின் மாதாந்த சந்திப்புகள் மூலம் இன்னமும் அதிகரித்துள்ளது. அதிலும் இந்த மாதத்தில் இருந்து எமது மாதாந்த சந்திப்புகளின் ஆரம்பமாக அழைக்கப்பட்ட ஒரு விருந்தினரின் சிறப்புரை ஒன்றும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'திறந்தமூல வன்பொருள்கள்' எனும் தலைப்பில் இந்த மாதம் இடம்பெறும் கலந்துரையாடலில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

மேலும், கடந்த இதழில் அறிவித்திருந்ததற்கமைய வடக்கு மாகாண கல்வித்திணைக் களத்துடன் இணைந்து எமது வாசகர்களுக்கான போட்டி ஒன்றினையும் ஒழுங்கு செய்துள்ளோம். கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு மற்றும் திறந்த பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது. வாசகர்கள் இந்தப் போட்டிகளில் தமக்கு பொருத்தமான பிரிவுகளில் கலந்துகொண்டு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை பெறலாம்.

இவைமட்டுமல்லாமல், இனிவரும் இதழ்களில் வாசகர்களாகிய உங்களின் ஆக்கங்களிற்கு முன்னுரிமை கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே உங்களின் ஆக்கங்கள் அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்ச்சியாக 'கம்ப்யூட்டர் ருடே' இதழின் ஊடாக உங்களிற்கான எமது சேவை தொடரும் என உறுதிகூறிக்கொண்டு இன்னும் ஒரு "கம்ப்யூட்டர் ருடே" இதழில் உங்களை சந்திக்கும் நம்பிக்கையுடன்.....

அன்புடன்

ஆசிரியர்

**பாடசாலை மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பபடிவம்**

இவ் விண்ணப்பபடிவத்தை இலக்கம் 243, ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டு சந்தியில் உள்ள **"MCAI Campus"**ல் வரும் ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்கவும்.

முழுப்பெயர் : ..............................................................................................

முகவரி : ..................................................................................................

தரம் : ........................................ இறுதி தவணைப்பரீட்சையில் மாணவர் நிலை : ........................

பாடசாலையின் பெயர் : ........................................................ தொலைபேசி இலக்கம் : ........................

மேலுள்ள தகவல்கள் என்னால் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும், எனக்கு வழங்கப்படும் புலமைப்பரிசிலினை பெற்று கணினி கற்கை நெறியினை பூர்த்தி செய்வேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

திகதி : ........................ கையொப்பம் : ........................




# அன்ரொயிட்டின் அடுத்த பதிப்பு

அன்ரொயிட் இயங்குதளம் Mobile மற்றும் Tablet சாதனங்களில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்ரொயிட் சாதனங்களுக்கு என செயலிகள் மற்றும் விளையாட்டுச் செயலிகள் என இலட்சக்கணக்கில் இலவசமாகவே கிடைக்கின்றன. இதனால் அன்ரொயிட் இயங்குதளம் கொண்ட மொபைல்கள் சந்தையில் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அன்ரொயிட் இயங்குதளத்தின் ஏழாவது பதிப்பு Android M. சோதனை பதிப்பு தற்போது டெவலப்பர்களுக்காக நெக்சஸ் சாதனங்களில் மட்டும் பயன்படுத்தப்படும் வண்ணம் உள்ளது. இந்த புதிய பதிப்பில் அன்ரொயிட் இயங்குதளத்தில் இருக்கும் முக்கியமான பிரச்சினைகள் சரி செய்யப்பட்டுள்ளது. அதில் சில முக்கிய அம்சங்களை பற்றி பார்ப்போம்.

**மென்பொருள் அனுமதி:**

அன்ரொயிட் 5.0 இயங்குதளத்தில் செயலிகளை நிறுவும்போது மட்டுமே முழு அனுமதியையும் கேட்கும். ஆனால் இந்த அன்ரொயிட் 6.0 (Android M) இல், செயலிகளைப் பயன்படுத்தும் போதும் இந்த அனுமதியை கேட்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உங்களுடைய சாதனம் மிக விரைவாக செயல்படும்.

**மின்கலத்தின் செயல்பாடு:**

அன்ரொயிட் இயங்குதளத்தில் மிகப்பெரிய பிரச்சினை என்னவெனில் மின்கலத்தின் செயற்பாட்டுத் திறன். இதனை சரி செய்யும் விதத்தில் அன்ரொயிட்-M இயங்குதளத்தில் Called Doze என்னும் வசதி அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன்மூலம் அன்ரொயிட் இயங்குதளத்தில் பின்புலமாக இயங்கும் சில செயலிகள் நிறுத்தப்படும். இதன் மூலமாக மின்கலத்தின் பயன்பாடு நீடிக்கும். மேலும் USB Type-C என்னும் வசதி மூலமாக மிக விரைவாக மின்னேற்றம் செய்து கொள்ளும் வசதியும் இந்த பதிப்பில் வெளிவர உள்ளது என்பது கூடுதல் செய்தியாகும்.


**Fingerprint (கைரேகை):**




கணினிகளில் முன்பிருந்தே இந்த சேவை உள்ளது. பாதுகாப்பாக கணினியை வைத்துகொள்ள கடவுச்சொல் கொண்டு பூட்டிவைப்போம். அதற்கு சிறந்த வழியாக இந்த Fingerprint வசதி இருக்கிறது. இதன் மூலம் உங்களுடைய கணினியை எவரும் பயன்படுத்த இயலாது. அதே போன்று தற்போது அன்ரொயிட் M இயங்குதளத்திலும் ஒரு வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உங்களுடைய சாதனம் அதிகம் பாதுகாக்கப்படும்.

# Microsoft Security Essentials சிறந்த இலவச Anti Virus






நாம் பெரும்பாலும் இலவச மென்பொருள்களையே பயன்படுத்த விரும்புவோம். முக்கியமாக Anti Virus மென்பொருள்கள் கட்டணமாக கிடைத்தாலும் அதன் இலவச பதிப்பினைத்தான் பயன்படுத்துவோம். கட்டண மென்பொருள் என்பதை தாண்டி அவற்றின் அதிகபட்ச விலையும் இதற்கு ஒரு காரணம். இந்த நிலையில் ஒரு இலவச Anti Virus உங்கள் கணினிக்கு மிகச் சிறந்த பாதுகாப்பை வழங்கினால் ?

ஆம், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இலவச AntiVirus மென்பொருளான "Microsoft Security Essentials" தான் அந்த மென்பொருள். 2009 ஆம் ஆண்டு இது அறிமுகம் செய்யப்பட்டது. ஒரே ஆண்டில் 3 கோடி முறை தரவிறக்கம் செய்யப்பட்டது இந்த மென்பொருள்.

**சிறப்பம்சங்கள்:**

1. இலவச மென்பொருள்
2. மைக்ரோசொப்ட் நிறுவன தயாரிப்பு
3. Computer viruses, spyware, Trojan horses and rootkits போன்ற பல வகையான Malware களை நீக்குகிறது.
4. கணினி வேகத்தை குறைப்பதில்லை.

இது மட்டுமன்றி மேலும் பல பயன்களை உள்ளடக்கியது இந்த மென்பொருள்.

இதை தரவிறக்கம் செய்ய என்ன வேண்டும்?

Windows XP – 256 MB RAM & 500MHz Processor.

Windows Vista & Windows 7 & 8 – 1GB RAM, 1GHz Processor. இது மேலே உள்ள நான்கு இயங்கு தளங் களிலும் இயங்கும். இதை எல்லாம் விட மிக மிக முக்கிய மாக நீங்கள் **Genuine Windows Operating System** பயன்படுத்துபவராக இருக்க வேண்டும்.


கடைசி வரி நிறைய பேருக்கு வருத்தம் அளிக்கக் கூடியது, ஏன் என்றால் இது எல்லோராலும் முடியாது. ஒரு Operating System வாங்க மட்டும் குறைந்த பட்சம் 10000 தொடக்கம் 15000 ரூபாய் வரை செலவு செய்ய வேண்டி வரும். இதை தான் Genuine Operating System என்று சொல்வார்கள். இதன் மூலம் எண்ணிலடங்கா பயன் உள்ளது என்பது வேறு விஷயம். ஆனால் நம்மில் பெரும்பாலானோர் போலி அல்லது களவுப்பிரதி Operating System போட்டு இருப்போம். அப்படி செய்தவர்கள் இதை பயன்படுத்த இயலாது.

ஆனால் தற்போது புதியதாக கணினி மற்றும் மடிக்கணினி வாங்கும் போது உங்களுக்கு இலவசமாக Genuine Operating System ஆனது தரப்படுகிறது. பெரும்பாலான கணினி நிறுவனங்கள் இதை செய்கின்றன. எனவே அவர்கள் இதனை தரவிறக்கம் செய்யலாம்.

**உங்களுடையது Genuine Operating System தானா என்று கண்டுபிடிப்பது எப்படி?**

இதற்கு இரண்டு எளிய வழிகள் உள்ளன. XP பயனர்கள் http://www.microsoft.com/genuine/validate/ இணைப்பில் சென்று சரிபார்த்து கொள்ளலாம். ஒரு செயலி தரவிறக்க மான பின்பு இதை செய்திடலாம். இதில் உறுதியானால் நேரடியாக Microsoft Security Essentials பக்கத்திற்கு நீங்கள் வந்து விடுவீர்கள்.


Windows 7 & 8 பயனர்களும் மேலே உள்ளதை செய்ய லாம். அல்லது My Computer மீது வலது சொடுக் கினைச் செய்து Properties பகுதிக்கு சென்று, அதில் கீழே உள்ளது போல வந்தால் உங்களுடையது Genuine OS ஆகும்.




உங்கள் OS Genuine தான் என்றால் இனி நீங்கள் Microsoft Security Essentials ஐ தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

அதற்கான இணைப்பு -http://windows.microsoft.com/en-gb/windows/security-essentials-download

# SECRET FOLDER



ராதா சோபிகா

கோப்புகளை இரகசியமாக பூட்டி வைக்கவும், முக்கியமான சில தகவல்களை பாதுகாத்துக்கொள் வதற்கும் விண்டோஸ் இயங்குதளத்திற்கு என பல்வேறு மென்பொருள் உள்ளன. அதில் ஒன்றுதான் Secret Folder.

இவ் மென்பொருளை தரவிறக்கி கணினியில் நிறுவிக்கொள்ளவும். மென்பொருளை நிறுவும் போதே கடவுச்சொல் கேட்கும், அதனை உள்ளிட்டு கொள்ளவும். பின் இந்த மென்பொருளை Open செய்து Add பொத்தானை அழுத்தி எந்தெந்த கோப்புகளை Lock செய்ய வேண்டுமோ அதனை தெரிவுசெய்யவும். பின் Lock என்ற பொத்தானை அழுத்தவும். நீங்கள் தெரிவு செய்த கோப்புகள் Lock செய்யப்பட்டுவிடும். மீண்டும் Lock செய்த கோப்பினை Unlock செய்ய Secret Folder அப்ளிகேஷனை Open செய்து பின் எந் தெந்த கோப்புகளை Unlock செய்ய வேண்டுமோ அதனை தெரிவு செய்து பின் Unlock பொத்தானை அழுத்தவும்.

நீங்கள் Secret Folder இன் கடவுச்சொல்லை மாற்றிக் கொள்ளவும் முடியும். இதற்கு Preferences என்னும் பொத்தானை அழுத்தி அதில் தோன்றும் விண்டோவில் Change password என்னும் பொத்தானை அழுத்தி கடவுச்சொல்லை மாற்றியமைத்துக்கொள்ள முடியும்.

கோப்புகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இந்த மென்பொருள் கண்டிப்பாக உதவும்.

மென்பொருளை தரவிறக்க: http://ohsoft.net/en/download.php

WE, A GLOBAL BASED IT COMPANY LOOKING FOR

Web Developers
(PHP, MySQL, HTML5, CSS3, JavaScript, jQuery, Joomla, WordPress)

UI/UX Engineers
(HTML5, CSS3, JavaScript, jQuery, Bootstrap, AngularJS, BackboneJS)

Graphic Designers
(Adobe Photoshop, Adobe Illustrator, CorelDRAW)

Mobile App Developers
(iOS, Android, Windows Mobile, PhoneGap)

For workstations - Colombo and Jaffna

Suitable candidates are requested to forward your CV to jobs@innovay.com indicating the position you apply at the subject of your email. Specify the workstation you preferred also in your email (Trainees also encouraged to apply).

FREE

TRAINING IN "SOCIAL MEDIA MARKETING"

Do you have a Creative Mind?
Are you passionate with Social Media?
Having interest in Digital Marketing?
Looking for Job Opportunities?

If "YES", you are the person we seeking...

A training on Social Media & Internet Marketing is now open and we are welcome interested people to join with the training to learn the trends and techniques of Social Media & Internet Marketing.

- Duration of training - 6 months
- Job placements for shinning stars
- School leavers also encouraged to apply

Interested people are expected to send your request to jobs@innovay.com indicating "Training in Social Media Marketing" at the subject of your email.

www.innovay.com
/ innovay

innovay



# CYBER CRIME

## - ஒரு பார்வை

இணையம் ஒரு விசித்திரம். ஒரு பக்கம் எண்ணற்ற வசதிகள் மூலம் இனிய முகங்களை காட்டி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. இன்னொரு பக்கம் hacking, spam, ஆபாசம் போன்ற வக்கிர முகங்களை காட்டி நம்மை துன்பத்தில் ஆழ்த்துகின்றன. cyber crime எனப்படும் இணைய குற்றங்களை பற்றியும், பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் சிறிதளவு இங்கு பார்ப்போம்.

**இணைய குற்றங்கள் (Cyber Crimes):** credit card, debit card மூலம் இணையத்தில் பணப் பரிமாற்றங்கள் நடக்கும்பொழுது, கடவுச்சொல் உட்பட கணக்கு விவரங்களை திருடுவது.

**பாலியல் ரீதியான தொல்லைகள் :** இணைய அரட்டையில் ஆரம்பித்து dating இல் முடிகிறது, இன்றைக்கு சில இணைய நட்புகள். அதுமட்டுமின்றி காதலன் என்ற பெயரில் வக்கிர வெறிபிடித்த கயவர்கள் பெண்களை ஆபாசமாக படம்பிடித்து அதனை இணையத்தில் வெளியிடுகிறார்கள். மேலும் அதனைக் கொண்டே பெண்களை மிரட்டி வருகிறார்கள்.

**போதை பொருள் விற்பனை :** தடைசெய்யப்பட்ட போதை பொருள்களை விற்பனை செய்வதற்கும் இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள்

**இணையதளங்களை Hack செய்வது :** ஹேக்கர்களிடமிருந்து அமெரிக்காவின் சி.ஐ.ஏ-யும் தப்பவில்லை, மின்னணு சாதனங்களில் ஜாம்பவனாக திகழும் Sony உம் தப்பவில்லை. சமீப காலமாக பல தளங்கள் hack செய்யப்படுகின்றது.

இவற்றைவிட கொடியது, குழந்தைகள் மீதான பாலியல் தாக்குதல்கள். மனித உருவில் பல மிருகங்களும் நம்முடன் வாழத்தான் செய்கின்றன. இவர்கள் சிறுவர், சிறுமிகள் உரையாடும் அரட்டை அறைகளுக்கு(Chatting) சென்று தங்களை குழந்தைகளாகவே அறிமுகம் செய்கின்றனர். பிறகு அவர்களின் புகைப்படங்கள், வீட்டு முகவரி, பள்ளி முகவரி என தகவல்களை பகிர்கின்றனர். இது போன்ற கேடு கெட்டவர்கள் ஒரு அமைப்பாகவே செயல்படுகின்றனர். தங்களுக்குள் குழந்தைகளின் ஆபாச புகைப்படங்களையும், தகவல்களையும் பகிர்ந்துக் கொள்கின்றனர்.

**பாதுகாப்பு வழிகள்:**

1. எந்த நிலையிலும் முகம் தெரியாத நபர்களிடம் உங்கள் தொலைபேசி எண், வீட்டு முகவரி, பள்ளி முகவரி போன்றவற்றை பகிர வேண்டாம்.
2. Facebook போன்ற சமூக தளங்களில் அறிமுகம் அல்லாதவர்களை நண்பர்களாக சேர்க்க வேண் டாம்.

3. குழந்தைகள் தனி அறையில் இணையத்தில் உலவுவதை அனுமதிக்காதீர்கள். குழந்தைகள் பயன்படுத்தும் கணினிகளை பொதுவான இடத்தில் வைப்பது நலம்.

4. இணையம் பற்றியும் பாதுகாப்பு வழிகள் பற்றியும் உங்கள் குழந்தைகளிடம் மனம் விட்டுப் பேசுங்கள். கணினி பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? என்பதை கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். அவர் களுடன் இணையத்தில் சிறிது நேரம் செலவிடுங்கள். அதிகமான குழந்தைகள் வழிமாறி செல்வதற்கு சரியான அரவணைப்பு இல்லாததே காரணம் என கருதப்படுகின்றது.

5. உங்கள் குழந்தைகள் பார்வையிடும் வலைத்தளங் களை கண்காணியுங்கள். நீங்கள் செல்லும் போது குழந்தைகள் அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த வலைத் தளத்தை மூடினால், உடனே கவனிக்கவும்.

6. அறிமுகம் இல்லாத நபர்கள் உங்களை நேரில் சந்திக்க அழைத்தால் மறுத்துவிடுங்கள்.

7. நீங்கள் மற்றவர்களுடன் அரட்டை அடிப்பதை அவர்கள் பதிவுசெய்யக்கூடும் என்பதை மறவா தீர்கள்.

8. அறிமுகம் இல்லாதவர்களுடன் முகம் பார்த்து அரட்டை அடிக்கும் வீடியோ சாட்டிங்கை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதுவும் பதிவு செய்யப்பட்டு, உங்களுக்கு தெரியாமலே இணையத்தில் பரப்பப் படலாம்.

9. இணையத்தில் உங்களை பற்றிய முழு விவரங் களையும் பகிர வேண்டாம். முக்கியமாக facebook.


10. குழந்தைகள், பெண்கள் புகைப்படங்களை இணை யத்தில் பகிர்வதை தவிர்க்கவும். தற்போது உள்ள தொழில்நுட்பங்கள் மூலம் அந்த புகைப்படங்களை ஆபாசமாக மாற்றலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

11. உங்கள் password ஐ பெற்றோர்களை தவிர வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்.

12. பணபரிமாற்றங்கள் செய்யும்பொழுது அந்த பக்கத் தின் முகவரியை பாருங்கள். http:// என இருந்தால் உங்கள் card விவரங்களை கொடுக்காதீர்கள். https:// என்று இருந்தால் மட்டுமே பணப்பரிமாற்றம் செய்யுங்கள். https:// என்பது பாதுகாப்பான வழியாகும்.

13. காதலன் என்றாலும் உங்களை படம்பிடிப்பதை அனுமதிக்காதீர்கள்.





பிரச்சனை பெரிதானால் cyber crimes இல் புகார் செய்ய லாம். புகார் செய்யும் முன் வழக்கறிஞரிடம் ஆலோசனை பெறவும்.

cyber crimes இல் ஏற்றுக்கொள்ளப்படும் புகார்கள்:

1. இணையக் கடவுச்சொல் திருட்டு
2. அச்சுறுத்தும் மின்னஞ்சல்கள்
3. இணைய பின்தொடர்தல் (Cyber Stalking) பாலியல் ரீதியிலான தொல்லைகள், வேறொருவர் உங்களை போல இணையத்தில் உலவுவது, மிரட்டல்கள் ஆகியவைகளும் அடங்கும்.
4. குழந்தைகள் வன்கொடுமை / ஆபாச தளங்கள்
5. கடன் அட்டை எண் திருட்டு
6. வலைத்தள hacking

இலங்கையில் புகார் கொடுக்க:

http://www.police.lk/index.php/complaint-form என்கிற இணைப்புக்குச்சென்று, உங்கள் புகாரினை அளிக்கலாம்.

# NORTH LEAD
**Vision Of Technology**


**கணினி** மற்றும்
உதிரிப்பாகங்களின்
**விற்பனை முன்னோடிகள்**



## வடக்கில் எங்குமில்லாத மலிவு விலை எம்மிடம் மட்டுமே!

உங்களது சகலவிதமான பாவித்த (Lap top & Desktop)
கணினிகளை கொடுத்து இன்றே புதிய கணினி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் கணினிகளுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படும்.

### உங்கள் கணினிகளை ஒரே நாளில் பழுதுபார்த்து பெற்றுக்கொள்ளலாம்.






## கமராக்கள் 3500/=இலிருந்து...

உங்கள் காரியாலயங்கள், தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளின் பாதுகாப்பினைக் கண்காணிக்க குறைந்த கட்டணத்தில் ஒருவருட உத்தரவாதத்துடன் ஒரேநாளில் பொருத்தித் தருகின்றோம்.

**கண்காணிப்பு கமராக்களுக்கான அனைத்து உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**



**SPECIAL PRICE FOR DEALERS**

www.northlead.lk | Email : info@northlead.lk

**Head Office** :- No. 328 A, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel : 021-222 4459 | Mob : 0774192275 | Fax : 021-222 4460

**Branch Office** :- No. 12,Kanagapuram Road, Kilinochchi, Sri Lanka.
Tel : 021-206 0909 | Mob : 0772533390 | Fax : 021-222 4460

# கலக்கும் DUBSMASH..!



உங்கள் வாயில் இருந்து ரஜினிகாந்த் தொடங்கி பாரக் ஒபாமா வரை அனைவரது குரலையும் கொண்டு வர முடியும் என்றால் நம்புவீர்களா? நம்பி தான் ஆக வேண்டும். அதற்காக தான் வந்துள்ளது Dubsmash செயலி. இலவசமாக கிடைக்கும் இந்த செயலியை பதிவிறக்கம் செய்தால் இதில் நிறைய குரல்கள் கொட்டிக் கிடக்கின்றன.

அது தவிர நீங்களே பதிவு செய்த குரல்களையும், உங்கள் அலைபேசியில் உள்ள சத்தங்களையும் பயன்படுத்தி கொள்ளலாம்.

பின்னர் திரையில் அலைபேயின் ஒளிபடக் கருவியை இயக்கி நீங்கள் தெரிவு செய்த குரலுக்கு ஏற்றவாறு உதட்டை அசைத்தால் உங்கள் உதட்டசைவோடு நீங்கள் தேர்ந் தெடுத்த குரல் இணைந்துவிடும். உதாரணமாக ஒபாமா வின் குரலுக்கு நீங்கள் உதட்டை அசைத்தால் உங்கள் வாயில் இருந்து ஒபாமாவின் குரல் கேட்பது போல் காணொளி பதிவாகும்.

இதனை நீங்கள் சமூக வலைதளங்களிலும் பகிர்ந்து கொள்ளும் வசதியை இந்த செயலி வழங்கியுள்ளது.

இந்த செய்லி தற்போது அதிக வரவேவை பெற்றுள்ள தோடு, உலகில் பிரபலமான பலரும் இதனை பயன்படுத்தி பல நகைச்சுவை காணொளிகளை இணையத்தில் பகிர்ந்து வருகின்றனர். இச் செயலியானது. வித்தியாச மான குரல்கள், பிரபலங்களின் குரல்கள் உங்கள் உதட்டசைவில் கேட்கவும். சுயமி (Selfie) பிரியர்களுக்கு உதவும் விதமாக அமைந்துள்ளது.

---



## எம் கேள்விக்குஎன்ன பதில் ?

1. தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் LTE என்று அழைக்கப்படுவதன் விரிவாக்கம் என்ன ?
2. Facebook சமூக வலைத்தளம் உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன ?
3. 1GB வன்தட்டு (Hard Disk) எத்தனை MB க்ளைக் கொண்டிருக்கும் ?

சரியான விடை எழுதும் வாசகர்களில் இருந்து அதிஷ்டசாலிகளாக தெரிவுசெய்யபடும் மூவருக்கு பரிசாக pen drive காத்திருக்கிறது. பாரட்டு பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விபரம் புத்தகத்தில் பிரசுரிக்கப்படும். நீங்களும் பதில் எழுதுங்கள் , Pen Drive வெல்லுங்கள் .... !



சரியான விடைகள் வந்து சேரவேண்டிய முகவரி:
**'கம்யூட்டர் ருடே' யின்**
"எம் கேள்விக்கு என்ன பதில்"
**359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் : 30 ஆனி 2015**

# Windows 10 இல் inbuilt ஆன விளையாட்டாக Candy Crush Saga வருகிறது




விண்டோஸ் இன் வரவுள்ள OS ஆன விண்டோஸ் 10 இல் hearts,minesweeper,solitaire போன்ற விளையாட்டு களுடன் Candy Crush Saga ஐயும் சேர்த்திருக்கிறது விண்டோஸ் நிறுவனம்.

மைக்ரோசொப்ட்டின் பிரதான சந்தைப்படுத்தல் முகாமையாளர், பிராண்டன் லி பிளாங், கூறுகையில், "விண்டோஸ் 10 இல் உள்ளடங்கி இருக்கும் 'Candy Crush Saga' கிங்ஸிடமிருந்து நாங்கள் பெறும் முதல் விளையாட்டாகும். காலப்போக்கில் கிங்ஸின் பல விளையாட்டுக்களை விண்டோஸில் எதிர்பார்க்கலாம்." என்று கூறினார்.


இந்த உள்ளடக்கம் Candy Crush Saga பிரியர்களுக்கு மகிழ்ச்சியை தருமே தவிர, பிறருக்கு இது சரியானதாக படவில்லை. விண்டோஸ் 8 இலிருந்து, மைக்ரோசொப்ட் தனது விளையாட்டு தொகுப்பை, windows store இற்கு மாற்றிவிட்டது. பயனர்களுக்கு ஏதேனும் விளையாட்டு வேண்டுமென்றால், store இலிருந்து தரவிறக்கம் செய்து விளையாடி கொள்ளலாம். ஆனால் தற்போது OS இல் இப்படி விளையாட்டை முன்னதாகவே நிறுவியது பயனர்களுக்கு எவ்விதத்திலும் பயனளிக்கப் போவதில்லை. இது தேவையற்ற bloatware என பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.




(Bloatware என்பது மென்பொருளை develop செய்யும் போது அதில் developers களால் நிறுவப்படும் ஒரு மென்பொருளாகும். இது RAM ஐ ஆக்கிரமிப்பு செய்து கொள்ளுமே தவிர, பெரும்பாலும் பயனர்களுக்கு பயன்படக்கூடிய ஒன்றாக இருக்காது.)

விண்டோஸ் 10 இல் மேலும் பல கிங்ஸின் விளையாட்டுகள் இடம்பெறும் என்ற மைக்ரோ சொப்ட்டின் அறிக்கை, இந்த OS இல் இன்னும் பல bloatware கள் வரப்போவதை உறுதி செய்கிறது.

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்




தொடர் 02

D.Shelton,
IT Instructor,
Zonal Computer Resource Centre.
Jaffna.

## தரம் 10


இன்றைய நவீன யுகத்தில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பமானது பயன்படுத்தப்படாத துறைகள் அரிது எனலாம். அதற்கேற்ப குழவி முதல் கிழவி வரை, பூமியின் வட துருவம் முதல் தென் துருவம் வரை தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் பயன்படுத்தாத நபர்களோ, இடங்களோ இல்லை எனலாம். மேற்படி மனித வாழ்க்கையில் கணினியுடன் தொடர்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் மிகவும் இன்றியமையாத அம்சமாக விளங்கும் சந்தர்ப்பங்களாவன.

- கல்வித்துறை
- சுகாதாரத்துறை
- விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை
- கைத்தொழில் மற்றும் வியாபாரத்துறை
- போக்குவரத்துத்துறை
- பொழுதுபோக்குத்துறை
- பாதுகாப்புத்துறை
- மின் அரசாங்கம்

மேற்படி சந்தர்ப்பங்களுள் சிலவற்றை ஆராய்வோம்.

**1. கல்வித்துறை:**

- பல்லூடகத் தொழினுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை சிரமமின்றி மீண்டும் மீண்டும் செயற்படுத்தக் கூடியதாக இருத்தல்.
  - ✓ CD-ROM ஊடகத்தில் தகவற் கற்கை




- இலத்திரனியல் கல்வி முறைமை(e-Education, Online distance education) மூலம் தொலைக் கல்வியில் ஒரே தடவையில் ஏராளமான மாணவர்களுக்கு கல்வியை அளிக்கக்கூடியதாக இருத்தல்.
  - ✓ தினசரி நேரசூசி இன்மை, நிகழ்நிலை ஒப்படைகள், நிகழ்நிலை ஆசிரியர் தொடர்பு, இலக்கமுறை நூலக முறைமை போன்ற வசதிகள் காணப்படுகின்றமை. போக்குவரத்து இடர்பாபடுகள், பணவிரயம் குறைக்கப்படல், நேரம் மீதப்படல், களைப்பு இழிவாக்கப்படல் இதன் அனுகூலங்களுள் சிலவாகும்.
- இலத்திரனியல் கற்கை முறைமையானது (e-Learning) மாணவர்களுக்கு சுயகற்றலை ஊக்குவிப்பதுடன் கல்வித்துறையின் வினைத்திறனையும் அதிகரிக்கச் செய்கின்றது.

www.nenasala.lk, www.e-thaksalawa.moe.gov.lk, www.edulanka.lk


- மாணவருக்குக் கற்றலில் துணைபுரிதல்.
  - ✓ பாடசாலைக் கல்வி முறைமைக்கும், உயர் கல்வி முறைமைக்கும் பயன்படும் வகையில் கற்றல்முகாமைத்தொகுதி(Learning Mana-gement System – LMS), வகுப்பறையில் இணையத்தினூடாக தகவல்களைச் சேகரித்தல்.

◆ பாடசாலைக்குரிய தரவுத் தளங்களைக் கையாள்வதனூடாக பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளில் கணினி இன்றியமையாத அம்சமாக விளங்குகின்றது.

✓ மாணவர்களது விபரங்கள், பரீட்சைப் புள்ளிகள் மற்றும் பெறுபேறுகள், பாடசாலை நேரசூசிகை, விளையாட்டுப் போட்டிகளின் பெறுபேறுகள் போன்றவற்றினை தரவுத்தளங்களினூடு கையாளல்.

◆ ஆசிரியருக்கு கற்பித்தல் செயற்பாட்டின்போது துணையாக விளங்குதல்.

✓ இணையத்தினூடாக தேவையான தகவல்களைப் பெறல், வினாத்தாள்கள், பாடக் குறிப்புகள், சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்கள் தயாரித்தல், அச்சிடுதல். விபரிப்பதற்குக் கடினமான விடயங்களை பல்லூடக வசதிகளுடன் முன்வைப்புச் செய்தல் (அணு, இயற்கை அனர்த்தங்கள், பரிசோதனைகள்).




**2. சுகாதாரத் துறை:**

◆ கணினியின் துணையுடன் தொழிற்படுகின்ற மருத்துவப் பகுப்பாய்வு இயந்திரங்களின் மூலமாக துல்லியமாக நோய் நிருணயம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் சுகாதாரத்துறையானது தரமானதும், வினைத்திறன் மிக்கதுமான சேவையை மக்களிற்கு அளிக்கின்றது.



| பொறிகள் | பயன்பாடு |
|---|---|
| கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை கதிப்பொறி - CAT | உடலின் உட்பகுதிகளை வெவ்வேறாக முப்பரிமான படமெடுக்கலாம் |
| காந்தப் பரிவு விம்பமாக்கற் பொறி - MRI | வானொலி அலை, வலிமையான காந்த பரிவு மூலம் உடலின் உட்பகுதிகளில் விபரமான ஒளிப்படங்களைப் பெறல் |
| மின் இதய வரையப் பொறி -ECG | இதயத் துடிப்பை அலைவடிவில் வரைபுத்தாளில் பதிவு செய்யும் |
| இதயநோய்த் திரையிடற் பொறி | இதயத் தொழிற்பாட்டை கணினித் திரையில் காட்டும் |
| மின் மூளைய வரைபியற் பொறி - EEG | மூளையின் தொழிற்பாட்டைப் பதிவு செய்தல் |
| குருதி வெல்லம் சோதிக்கும் பொறி | குருதியில் உள்ள வெல்லத்தின் அளவினைக் கணித்தல் |
| குருதி அமுக்கத்தை அளக்கும் பொறி | குருதியின் அமுக்கத்தினைக் கணித்தல் |

◆ E-Channeling மூலம் தொலைவிட வைத்திய நிபுணர்களைத் தொடர்புகொள்ளக்கூடிய வசதிகள், தொலை அறுவைச் சிகிச்சை முறைகள் போன்ற



வற்றிற்கும் கணினி பாரிய பங்களிப்பைச் செய்கின்றது (தொலை மருத்துவம்)

✓ நோயாளி வீட்டிலிருந்தவாறு சிகிச்சை பெறல், மருத்துவ அறிவுறுத்தல்களைப் பெறல். மருத்துவமனைப் பணியாளர்கள் தொலைப் பயிற்சிகளைப்பெறல்.

### 3. வங்கி மற்றும் நிதித் துறைகள்:

- ♦ வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கிளைகள் பிரதம அலுவலகத்துடன் வலையமைப்பினூடாக தொடர்புபடுத்தப்பட்டிருப்பதனால் எந்தவொரு கிளையிலிருந்தும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ♦ தன்னியக்க காசளிப்பு இயந்திரங்கள் (ATM) மூலம் பல்வேறு வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளதால் வங்கி வாடிக்கையாளர்கள் தமது நடவடிக்கைகளை இவ்வியந்திரங்கள் மூலம் இலகுவில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல்.
- ♦ Telebanking, Phonebanking, Netbanking போன்ற சேவைகளினூடாக வங்கிக்குச் செல்லாது வங்கிக் கணக்கு சார்ந்த நடவடிக்கைகளை வீட்டிலிருந்தவாறே மேற்கொள்ளக்கூடிய வசதி.

✓ வங்கிக் கணக்குகளிற்கிடையே பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ளல். மின்சார, தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்துதல்.





- ♦ இணையத்தைப் பயன்படுத்தி சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இலகுவாக கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகள்.

### 4. தொடர்பாடற் துறை:

- ♦ கணினித் தொழினுட்பமும், தொடர்பாடற் தொழில்நுட்பமும் இணைந்து ஆற்றும் சேவை அளப்பரியன.
- ♦ செல்லிடத் தொலைபேசி மூலம் உடனுக்குடன் பிறருடன் தொடர்பு கொள்ளக்கூடிய வசதியினால் இன்றைய உலகம் சுருங்கிவிட்டது எனலாம்.

✓ வீடியோ மாநாடு, மின்னஞ்சல் சேவை, தொலைநகல் சேவை.

- ♦ தொலைக்காட்சி, வானொலி போன்ற பொதுசன ஊடகங்கள் தமது தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு கணினியைப் பயன்படுத்துகின்றன.
- ♦ புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை மிக விரைவாக வடிவமைக்கவும், அச்சிடவும் கணினி பயன்படுத்தப்படுகின்றன.




### 5. போக்குவரத்துத் துறை:

- ♦ குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திணைக்களம் போன்றவை தமது அன்றாட நடவடிக்கைகளை கணினியின் உதவியுடன் மேற்கொள்கின்றன.
- ♦ விமானப் போக்குவரத்துத் துறையில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு, விமான அனுமதிச் சீட்டு விநியோகம், ஆசன ஒதுக்கீடு ஆகிய நடவடிக்கைகளில் கணினியின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.



♦ தன்னியக்கக் கட்டுப்பாட்டுத் தொகுதி மூலம் சடுதி விபத்துக்கள், சட்டவிரோத செயல்கள், வாகன நெரிசல் போன்றவற்றை அவதானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 6. கட்டட நிர்மாணத் துறை:

♦ கட்டட நிர்மாணத் துறையில் கணினியைப் பயன்படுத்துவதன் மூலம் உறுதியானதும், சிறந்த தோற்றம் கொண்டதுமான கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

♦ கணினியைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த செலவில் சூழல் நேயம் மிக்க கட்டட நிர்மாணப் பொருட்கள் தயாரிக்கக்கூடியதாக இருத்தல்.

♦ சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நகரங்களை ஒழுங்கமைக்கும் பணிகள் கணினியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### 7. பாதுகாப்புத் துறை:


♦ ஏவுகணைகளை வழிப்படுத்தல், அணுக்கரு உலைகளை இயக்குதல் போன்ற மிகச் சிக்கலானதும் ஆபத்தானதுமான நடவடிக்கைகள் கணினியின் உதவியை நம்பியுள்ளன.

♦ புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்தல், தகவற் பகுப்பாய்வு போன்ற நடவடிக்கைகளுக்கு கணினி பயன்படுத்தப்படுகின்றன.




### 8. பொழுதுபோக்குத் துறை

♦ கணினி விளையாட்டுக்கள் பல்வேறு வயதுத் தொகுதியினருக்கும் பொருந்தக் கூடியதாகவும், பல்வேறு அறிவு ஆற்றல் மட்டங்களிற்கு ஏற்றதாகவும், விருப்பத்திற்கேற்ப பயன்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் இதன் சிறப்பம்சமாகும். இவ்விளையாட்டுக்கள் மூலமாக நுண்ணறிவு விருத்தி ஏற்படுவதுடன், விரைவாக தீர்மானங்களை



மேற்கொள்ளக்கூடிய ஆற்றலும், ஆக்கத்திறனும் வளர்கின்றன. கணினி விளையாட்டுக்கள் உடற்களைப்பு, உளத்தகைப்பு ஆகியவற்றைக் குறைக்கும் ஊடகமாகவும் விளங்குகின்றது.

✓ செஸ் (Chess)

♦ சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி பிறருடன் தகவல்களைப் பரிமாறல். உயர் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட தெளிவான 3D, 4D காட்சிகளை இரசித்தல். இணையத்துடன் இணைந்து தேவையான துறையில் மின்நூல்களை வாசித்தல், பதிவிறக்கம் செய்தல். இலக்கமுறைக் கமரா மூலம் எடுக்கப்பட்ட Audio, Video, Photo களை கணினியில் சேமித்தல்.


மேலே நாம் ஆராய்ந்த விடயங்கள் மாத்திரமல்ல இவை போன்று மேலும் பல பயன்மிக்க சந்தர்ப்பங்களை முன்வைக்கலாம் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விடயமே! எனினும் தகவல் தொழினுட்பத்தின் படைப்புக்களை பொருத்தமாக பயன்மிக்கவகையில் கையாள்வதன்மூலம் எதிர் விளைவுகளை இழிவாக்கிக் கொள்ளலாம்.

(வளரும்...)




# கட்டண மென்பொருளுக்கான மாற்று இலவச மென்பொருள்

நாம் அனைவரும் பெரும்பாலும் கோப்புக்களை தரவிறக்குவதற்கு உலாவியிலுள்ள வசதியையோ அல்லது IDM போன்ற கட்டண மென்பொருட்களையோ தான் பயன்படுத்துகிறோம். உலாவியில் தரவிறக்கம் செய்யும்போது,கோப்பு தரவிறக்கமடைந்து முடிகிற வரை உலாவி திறந்தே வைத்திருக்க வேண்டியிருக்கும்.




மேலும் தரவிறக்கம் நடந்து கொண்டிருக்கையில் நடுவில் Error ஆகி விட்டால்,மீண்டும் முதலில் இருந்து தொடங்க வேண்டியிருக்கும் Resume வசதி இருக்காது. இதற்காக,IDM பயன்படுத்துபவர்கள் மென்பொருளுக்கு தனியே கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

ஏறக்குறைய,IDM உள்ள அனைத்து வசதிகளும் உள்ள இலவச மென்பொருள் EAGLEGET ஆகும்.இது IDM போன்றே அனைத்து உலாவிகளுக்கும் தானாகவே Integerate ஆகிகொள்கிறது.இதனால் இம் மென்பொருளை நிறுவியவுடனே நமது அனைத்து தரவிறக்கங்களும் இந்த மென்பொருள் மூலமே நடை பெறுகிறது.

**சிறப்பம்சங்கள்:**

- பல பைல்களை ஒரே நேரத்தில் டவுன்லோட் செய்யலாம்.
- Resume செய்ய இயலும்.
- எளிதான பயனர் இடைமுகம்(User Interface). நமக்கு பிடித்த நிறத்தை வைத்துக்கொள்ளலாம்.



Youtube வீடியோக்களை நாம் பார்க்கும்போதே Eagleget Extension பொத்தானை உலாவியில் சொடுக்கும் போது நமக்கு வேண்டிய Format களில்(720p,480p,360p, mp4,webM,240p...etc) காணொளிகளை தரவிறக்கி கொள்ளலாம்.

- பதிவிறக்கம் செய்யப்படும் கோப்புக்கள் பதியப்படும் இடங்களை நாம் விருப்பபட்ட இடத்திற்கு மாற்றிக் கொள்ளலாம்.
- குறைவான நினைவகவமே பயன்படுத்துகிறது.
- இது ஒரு இலவச மென்பொருள்.

Supporting Platforms:Windows xp,7,8,8.1

Supporting Browsers:Chrome,Firefox,Opera,IE,Maxthon.

**Download Link:**

http://www.eagleget.com/download/setup.

# மொபைல் இணைய இணைப்பின் வகைகள்

## (GPRS, E,3G, H, H+, 4G என்பன பற்றிய அறிமுகம்)

**எப்.எச்.ஏ. ஷிப்லி**
விரிவுரையாளர் - தகவல் தொழிநுட்பம்
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்
ஒலுவில்

அதிநவீன தொழில்நுட்பங்கள் நாளொரு ஜிகா ஹெர்ட்சும் பொழுதொரு மெகாஹெர்ட்சுமாக வளர்ந்து வரும் காலப்பகுதியில் நாமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தொழில்நுட்ப வேகம் நம் எல்லோரது நாளாந்த வேலைகளையும் கைப்பேசிக்குள் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. அடுத்தது என்ன? அடுத்தது என்ன? என்கிற சிந்தனைகளில் கூகிள், அப்பிள், மைக்ரோசொப்ட், சாம்சுங் போன்ற நிறுவனங்கள் தலையை பிய்க்காத குறையாக நவீன வசதிகளை அறிமுகம் செய்து கொண்டேயிருக்கின்றன. அதிலும் குறிப்பாக கைப்பேசி தொடர்பிலான வளர்ச்சிகள் ஆர்முடுகல் வேகத்தில் அசரவைத்துக் கொண்டிருக்கிறது. தற்காலத்தில் இணையத்தள பாவனையை மடிக்கணினிகளிலும், தனியாள் கணினிகளிலும் பயன்படுத்துவதைக் காட்டிலும் கைபேசிகளில் அதிகமானோர் உலாவருவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அத்தகைய கைப் பேசிகளில் இணைய வேகம் என்பது முக்கியமான ஒரு அம்சமாக பயனாளர்களால் கருதப்படுகிறது. இக்கட்டுரை என்னென்ன வகையான வலைப்பின்னல் இணைப்புக்கள் கைப் பேசியில் இணையத்தை பயன்படுத்தும்போது காணப்படுகின்றன என்பதை பயனாளர்களுக்கு தெளிவுபடுத்தும். இதன் மூலம் கைப்பேசி இணையப்பாவனையாளர்கள் வேகமான இணைய இணைப்பை உத்தரவாதப் படுத்திகொள்ள உதவியாக அமையும்.

**'2G'**

2G வலையமைப்பு என்பது இணையத்தளத்தை GPRS (General Packet Radio service) எனப்படும் சேவையின் மூலம் இணைப்பதற்கான வலையமைப்பு வகை ஆகும். இதன் வேகம் மிக மிக குறைவாகவே இருக்கும். இது 2000 ம் ஆண்டுகளில் அதிக பாவனையில் இருந்தமையை நீங்கள் அவதானித்திருக்கக்கூடும். இதன் மூலம் நீங்கள் 1GB data வை தரவிறக்கம் செய்ய 165 மணி நேரமும், 1GB data வை அனுப்ப அதே 165 மணி நேரமும் அண்ணளவாக தேவைப்படும்.

**'E'**

இதுவும் 2G (2.5G) EDGE (Enhanced Data access for GSM Evaluation) கைபேசி இணையம் ஆகும். 2008 ஆம் ஆண்டு முதல் இதன் பயன்பாடு அதிகமாக உள்ளது. இதன் மூலம் நாம் 1GB data வை தரவிறக்கம் செய்ய 44 மணி நேரமும், 1GB data வை அனுப்ப 89 மணி நேரமும் ஆகும்.. உங்கள் கைப்பேசி இணைய இணைப்பில் இருக்கும்போது "E" என்னும் குறியீடு தென்படுமாயின் நீங்கள் 2G (2.5G) EDGE (Enhanced Data access for GSM Evaluation) இணைப்பில் இணையத்தை உலாவருகிறீர்கள் என்று பொருள்.

**'3G'**

2G தொழினுட்பத்தின் குறைகளை நிவர்த்தி செய்யவும், வேகமான இணைய இணைப்பை பாவனையாளர்களுக்கு வழங்கவும் இந்த 3G கைப்பேசி இணையம் UMTS (Universal Mobile Telecom System) அறிமுகம் செய்யப்பட்டது. இது இயங்க 3G இயங்கு தள வசதியுடைய கைபேசி (Smart Phone) அவசியமாகும். இதன் மூலம் நாம் 1GB data வை 6 மணி நேரத்தில் தரவிறக்கமும், அதே 1GB datait 18 மணி நேரத்தில் அனுப்பவும் இயலும். உங்கள் கைப்பேசி இணைய இணைப்பில் இருக்கும்போது "3G" என்னும் குறியீடு தென்படுமாயின் நீங்கள் 3G UMTS (Universal Mobile Telecom System) இணைப்பில் இணையத்தை உலாவருகிறீர்கள் என்று பொருள்.

'H'

இது 3G மொபைல் இண்டர்நெட்டின் மேம்படுத்தப்பட்ட ஒரு வடிவமாகும். HSPA (High Speed Packet Acceess) என இது அழைக்கப்படுகிறது.. இதை Smart Phoneகளின் மூலம் மட்டுமே பயன்படுத்த முடியும். இதன் மூலம் நாம் 1GB data வை 25 நிமிட நேரத்தில் டவுன்லோடும், அதே 1GB data வை 45 நிமிட நேரத்தில் அனுப்பவும் இயலும். உங்கள் கைப்பேசி இணைய இணைப்பில் இருக்கும்போது "H" என்னும் குறியீடு தென்படுமாயின் நீங்கள் HSPA (High Speed Packet Acess) இணைப்பில் இணையத்தை உலாவருகிறீர்கள் என்று பொருள்.

'H+'

இதுவும் 3G மொபைல் இணையத்தின் ஒரு வடிவமாகும். EHSPA (Evolved High Speed Packet Access) என இது அழைக்கப்படுகிறது.. இது இயங்க 3G இயங்குதள வசதியுடைய கைப்பேசி (Smart Phone) அவசியமாகும். இதன் மூலம் நாம் 1GB dataவை 5 முதல் 20 நிமிடங்களில் தரவிறக்கம் செய்யவும், 1GB data வை 15 முதல் 39 நிமிட நேரத்தில் அனுப்பவும் முடியும். உங்கள் கைப்பேசி இணைய இணைப்பில் இருக்கும்போது "H+" என்னும் குறியீடு தென்படுமாயின் நீங்கள் EHSPA (Evolved High Speed Packet Access) இணைப்பில் இணையத்தை உலாவருகிறீர்கள் என்று பொருள்.

'4G'

இச்சேவை 4G network internet - LTE (Long Term Evolution) இலங்கையின் குறிப்பிட்ட சில நகரங்களில் மட்டுமே கிடைக்கின்றது. இதன் வேகம் மிகவும் அதிகம். இதை இயக்க அவசியம் 4G இயங்குதள மொபைல் (SmartPhone)தேவை. இதன் மூலம் நாம் 1GB datait 3 நிமிடத்தில் தரவிறக்கவும். அதே 1GB dataவை அனுப்ப 5 நிமிடம் மட்டுமே போதும். இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கை முழுவதும் இச்சேவையை இணைய சேவை வழங்குநர்கள் (Internet Service Providers) அறிமுகம் செய்வர் என எதிர்பார்க்கலாம். உங்கள் கைப்பேசி இணைய இணைப்பில் இருக்கும்போது "4G" என்னும் குறியீடு தென்படுமாயின் நீங்கள் LTE (Long Term Evolution) இணைப்பில் இணையத்தை உலாவருகிறீர்கள் என்று பொருள்.

மேற்குறிப்பிடப்பட்ட இணைய இணைப்புக்கள் தவிர 5G, 6G, 7G ஆகிய நவீன தொழில்நுட்பங்களின் உருவாக்கம் தொடர்பான ஆய்வுகளை தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் 5Gவலையமைப்பு அறிமுகம் செய்யப்பட வாய்ப்பிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எது எப்படியோ இத்தொழில்நுட்பங்கள் நாளுக்குநாள் மேம்பட்டுக்கொண்டிருப்பது பாவனையாளர்களுக்கு பெரிதும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.


# கம்ப்யூட்டர் ருடே

## சஞ்சிகையின் சிறப்புரையுடன் கூடிய மாதாந்த ஒன்று கூடல்

தலைப்பு : **Open Source Hardware**

சிறப்புரை வழங்குபவர் : Mr.Yogarajah Sharmic

Managing Director, Business Network System.

காலம் : 19.06.2015 வெள்ளிக்கிழமை

நேரம் : பிற்பகல் 5.00 மணி

இடம் : **IIS City Campus**,

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்




# Xperia வரிசையில் Sony Xperia M4 Aqua அலைபேசியை வெளியிட்டது Sony.

ஜப்பான் தயாரிப்புகள் என்றால் அனைவரும் கண்ணை மூடிக்கொண்டு வாங்கி விடுவது வழக்கம். அப்படி ஒரு பெயரை வாங்கித் தக்க வைத்தது Sony நிறுவன தயாரிப்புகள்.

ஆரம்பத்தில் கணினி, கமரா தயாரிப்பில் முழு ஈடுபாட்டுடன் இருந்த Sony அதன் பின் smartphone தயாரிப்பில் காலூன்றி தற்போது முன்னணி இடத்திலும் உள்ளது.

இதன் smartphone வரிசையில் Xperia மிகவும் பிரபலமாகிய ஒன்று அந்த வரிசையில் Sony Xperia M4 Aqua என்ற போனை தற்போது வெளியிட்டுள்ளது. 4G LTE இல் இயங்கக் கூடிய Aqua dual a 64 bit Snapdragon 615 octa core processor கொண்டது.

இதன் சில சிறப்பம்சங்களை இங்கு நாம் பார்க்கலாம்



இது ஒரு waterproof செல்பேசி. அதனால் தண்ணிரில் விழுந்தால் கூட எந்த பாதிப்பும் கிடையாது.

MSM8939 + Adreno 405 GPU cila 1.5GHz Qualcomm Snapdragon 615 octa core புரசசர் கொண்டது.

இந்த செல்பேசி 135g இலும் குறைந்த எடையும் மற்றும் 7.3mm தடிமன் கொண்ட மெலிதான செல்பேசி.

2 GB RAM வசதி கொண்டுள்ளது. 8GB மற்றும் 16GB சேமிப்பு திறனைக் கொண்டுள்ளது. மேலும் SD கார்டு மூலம் 128GB வரை சேமிப்புத் திறனை விரிவுபடுத்திக் கொள்ளலாம்.

1280 x 710 pixcel வசதி கொண்ட 5 இஞ்சி IPS திரை வசதியுடையது.

LED Fash உடன் இணைந்த 13MP முதன்மை ஒளிப்படகருவி மற்றும் 5MP முன்புற ஒளிப்படக்கருவியையும் கொண்டுள்ளது.

முதன்மை ஒளிப்படகருவி 1080p கொண்ட காணொளிகளையும், முன்புற ஒளிப்படக்கருவி 720p கொண்ட காணொளிகளையும் பதிவு செய்யக்கூடியவை.

கூடுதல் அம்சமாக 4G, 3G, 2G, NFC, Wi-Fi, Bluetooth 4.1,SONY 3D sound technology, மற்றும் GPS with GLONASS போன்ற அனைத்து வசதிகளும் உள்ளன.

இதன் மின்கலம் 2400 mAh திறன் கொண்டது.

இரட்டை Sim வசதி கொண்டது. இந்த செல்பேசி வெள்ளை, கருப்பு, மற்றும் பவளம் போன்ற வண்ணங்களில் கிடைக்கிறது.

# Microsoft இனது சான்பிரான்ஸிஸ்கோ கிளையின் புதிய மேலாளர் பதவிக்கான நேர்முகம்.

ஏறக்குறைய 10000 பேர் கூடியிருந்தனர். அதில் ஒருத்தர் நம் கந்தன் இரங்கசாமி. அனைவரும் பரபரப்பாய் இருக்க, நம்மாளோ iPad இல் பாட்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பில்கேட்ஸ் அறைக்குள் நுழைய, அனைவரும் வணக்கம் கூறி அமர்கின்றனர்.

பில்கேட்ஸ்: “வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. ஜாவா தெரியாதவங்க வெளியே போகலாம்”.

2000 பேர் வெளியேறுகின்றனர்.

கந்தன் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறார். “எனக்கு ஜாவா தெரியாது. இருந்தாலும் இங்கு இருப்பதால் எனக்கு ஒன்றும் நட்டமில்லை. என்னதான் நடக்கிறதென்று பார்ப்போம்!”

பில்கேட்ஸ்: “100 பேர் உள்ள நிறுவனத்தை நிர்வாகம் செய்த அனுபவம் இல்லாதவர்கள் வெளியேறலாம்”.

2000 பேர் வெளியேற, கந்தன் முன்பு போலவே சொல்லி, தன்னைத்தானே தேற்றிக் கொள்கிறார்.

பில்கேட்ஸ்: “பொது நிர்வாகத்தில் இளங்கலை பட்டம் பெறாதவர்கள் வெளியேறலாம்”.

தற்போதும் 2000 பேர் வெளியேற, கந்தன் மீண்டும் தனக்குத்தானே அதே பதிலைச் சொல்லிக் கொள்கிறார்.

இப்படியே எல்லோரும் வெளியேற, கடைசியில் கந்தனும் இன்னொருவரும் மட்டும் இருக்கிறார்கள்.

பில்கேட்ஸ்: “முதன் முதலில் மனிதன் பயன்படுத்திய மொழி தெரியாதவர்கள் வெளியேறலாம்”.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர்ந்திருக்க, “உங்கள் இருவருக்கும் ஆதி காலத்து மொழி தெரியுமெனில் அதில் எனக்கு உரையாடிக் காட்டுங்கள்” என்றார் பில்கேட்ஸ்.

ரதன்: “எந்த ஊரு நீங்க”?

மற்றவர் : “சாவகச்சேரி பக்கம் ”!...

தமிழன்டா......



# Microsoft® Office™ இற்கு மாற்றாக சில இலவச மென்பொருட்கள்

நாம் அனைவரும் MS Office தான் அதிகமாக உபயோகிக்கிறோம். நாம் Project செய்யும் பொழுதோ அல்லது presentation செய்யும் பொழுதோ MS Office ஐ தான் பெரிதும் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. ஆனால் இறுதி கட்டத்தில் MS Office இல் ஏதாவது பிரச்சனை என்றாலோ அல்லது நாம் பயன்படுத்த வேண்டிய கணினியில் MS Office இல்லாவிட்டாலோ பிரச்சினை தான். அதை தவிர்க்க,இலவசமாக கிடைக்கும் சில மாற்று மென் பொருட்கள் குறித்து பார்ப்போம்.

## 1. Open Office.Org

OpenOffice.org

MS Office இற்கு அடுத்து அதிக அளவில் உபயோகப்படுத்தப்படும் மென்பொருள் இது. முற்றிலும் இலவசமானது. wordprocessing, spreadsheets, presentations, graphics, databases அனைத்தையும் செய்கிறது. இது ஒரு Open Source மென்பொருள் என்பது கூடுதல் சிறப்பு.

## 2. LibreOffice (Go OO)

LibreOffice
The Document Foundation

உபயோகப்படுத்துவதற்கு மிகவும் எளிதானது, முற்றிலும் இலவசமானது, MS Office கோப்புகளை இதில் எந்த Extension மாற்றமும் செய்யாமல் பாவிக்கலாம். இதுவும் ஒரு Open Source மென்பொருள்.

## 3. IBM Lotus Symphony

அதிக Tool களை கொண்டது இந்த மென் பொருள், பயன்படுத்துவதற்கு எளிதானது, நிறைய Tool களை கொண்டதால் பயன்பாடும் அதிகம். முற்றிலும் இலவசமானது. மொத்தம் மூன்று பயன்பாடுகளை உள்ளடக்கியது. Lotus Symphony Documents, Lotus Symphony Spread sheets and Lotus Symphony Presentations.

குறிப்பிடத்தக்க மற்ற சில இலவச மென பொருட்கள்:

- Calligra suite (Windows/Linux) – Free- https://www.calligra.org/
- Kingsoft Office Free (Windows/Linux) — Free - http://www.kingsoftstore.com/
- FreeOffice (Windows/Linux) — Free - http://www.freeoffice.com/en/

தவறாமல் இதில் ஏதோ ஒன்றை Back up ஆக வைத்துகொள்ளுங்கள். தரவிறக்கம் செய்யவெல்லாம் எனக்கு நேரம் இல்லை, என்ன செய்வது என்று கேட்பவர்கள் இந்த online பயன்பாட்டைப் பயன்படுத்தலாம்.

## 1. Google Docs - https://docs.google.com/

Word processor, Spreadsheet, மற்றும் Presentation போன்றவற்றை இதன் மூலம் online இல் செய்து கொள்ளலாம். அத்தோடு Business Cards, Resumes, Calendars and Tables போன்றவற்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட Template-கள் உள்ளன. இதை பயன்படுத்த ஜிமெயில் கணக்கு மட்டும் போதும்.

## 2. Zoho - https://www.zoho.com/docs/

இது Word Document, Spreadsheet, மற்றும் Presentation போன்றவற்றை தனிப்பட்ட தேவைக்கு இலவசமாக online மூலம் உருவாக்க அனுமதிக்கிறது. இதற்கு நீங்கள் இந்த தளத்தில் கணக்கு வைத்திருக்க வேண்டும்.




# *Signal* இல்லாத இடத்தில் *Cellphone* -இல் *SMS* அனுப்ப புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் செய்திகளை விரைந்து அனுப்ப தந்தி முறை பயன்பட்டது. தந்திக்கு பிறகு கம்பி இணைப்புடன் கூட Telephone கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு புதிய தொழில்நுட்பங்கள் வளர்ந்து தற்பொழுது பயன்பாட்டில் இருக்கும் CellPhone கண்டுபிடிக்கப்பட்டது.

செல்போனில் முதலில் பேசுவதற்கு மட்டுமே வசதி இருந்தது. அதன் பிறகுTechnology வளர, வளர SMS, MMS, Bluetooth,Camera போன்ற பிற வசதிகளும் செல்போனில் இடம்பெற்றன.

அதில் முக்கியமான வசதியாக SMS வசதியை குறிப்பிடலாம். செல்போனில் பேசுவதற்கும், SMS செய்வதற்கு கண்டிப்பாக Signal கிடைக்க வேண்டும்.

Signal கிடைக்காத இடங்களில் செல்போனில் பேசவோ, SMS அனுப்பவோ முடியாது. Signal இல்லாத மலை பிரதேசங்கள், அடர்ந்த காடுகள் போன்றவற்றில் SMS அல்லது அழைப்பு மேற்கொள்ளவோ முடியாது.



தற்பொழுது செல்போன் இயங்குவதற்கு தேவையான network signal கிடைக்காத காடுகளிலும், மலைகளிலும் இருந்து Message அனுப்ப முடியும். இதற்குப் பயன்படுவது GoTenna என்ற பயன்பாடாகும்.

இந்த பயன்பாட்டினைப் பயன்படுத்தி, Signal கிடைக்காத மலைக்காடுகள், சுரங்கங்கள் போன்றவற்றிலிருந்து SMS அனுப்ப முடியும். ஒரே ஒரு நிபந்தனை என்னவென்றால், SMS பெறப்படும் நண்பர்கள் செல்பேசியிலும் GoTenna என்ற செயலி நிறுவப்பட்டிருக்க வேண்டும். இந்த GoTenna செயலி மூலம் அனுப்பபடும் SMS ஆனது, முதலில் போனுடன் இணைக்கப்பட்டுள்ள GoTenna கருவிக்கு அனுப்பபடும்.

அந்த கருவியானது அவற்றை ரேடியோ Signal களாக மாற்றி அனுப்பும். அனுப்பட்ட செய்தியை குறிப்பிட்ட நபர் இந்த கருவியைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும். நபரின் CellPhone -ல் GoTenna கருவியை அடைந்து, அது SMS ஆக மாற்றப்பட்டு கிடைக்கும்.

இந்த கருவியானது மலையேற்றம் செய்பவர்கள் (Mountaineering), சுரங்கத்தொழில்(Mining) செய்பவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். GoTenna கருவி பற்றியும் அதன் செயலியின் செயற்பாடு பற்றியுமான மேலதிக விபரங்களுக்கு http://www.gotenna.com இணையத்திற்குச் சென்று அதன் விளக்க காணொளியை பாருங்கள்.

# எனதருமைக் கணினியே.....



கண்ணாடி குடுவைக்குள்
அடைப்பட்ட ஒக்சிஜனாய் - இவ்வுலகை
கையலக கணினியின்
கட்டுக்குள் அடக்கிய
மாபெரும் மகானுக்கு
என் முதல் நன்றி!

முற்காலத்தில் இரேகைக்கு மட்டுமே
பயன்பட்ட விரல்கள்-இன்று
திரை திறந்து வினாடிக்கு வினாடி
விஞ்ஞான யுக்திகளை
மெய்யான கணினியில்
கணக்கீடு செய்கிறது!

முன்பொரு காலத்தில் சிறுபிள்ளை தனத்தின்
நடைவண்டி பயணமாய் எழுதுகோல்
பிடித்த விரல்கள்-இன்று
முடிவு தெரியாத பிரபஞ்ச வெளியாய்
ஒளிவெள்ளம் பாய்ச்சும் விளக்குகளினூடே
சுட்டியில் மண்டியிடுகிறது
விசைப்பலகையில் சடுகுடு ஆடுகிறது!

பனி உறங்கும் புல்லாக
மென்மையான உணர்வுகளை
அழகாக சுமந்து சென்று பிரசவிக்கும் தாயாய்
பிரதிபலித்த கடிதங்கள்-இன்று
விண்ணை கிழித்த மின்னலென கொட்டிக்கவிழ்த்த
வைரமென இணையத்தில் மின்னஞ்சல் செய்கிறது!

கட்டண பேசியில் ஆரம்பித்து கைப்பேசியில் கரம்கோர்த்து
பொலிவிழந்த பொழுதுகளை பூரணமாக்கி
மனமகிழ்ந்த வேலைகளில் முகம் பார்த்து
இதயத்தின் கனத்தினை இமை வழியே இறக்க
குறைவான கட்டணத்தில் நிறைவாக பேச
வீடியோச்சட்டிங் விடியலைப் படைக்கிறது..!

சுவாசக்காற்றாக உதிரத்துளியாக
உயிர்த்துடிப்பாக கிளை நரம்பாக
நம்முள் பின்னிப் பிணைந்த
இன்னொரு ஜீவன் கணினி...!

கணினி காதலன் சிம்பு.

# python™

## இலகு பைத்தன்

பல்வேறு கணினி மொழிகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உலகினை ஆக்கிரமித்து வருகின்ற போதும் ஒரு சில கணினி மொழிகள் தனக்கென ஒரு இடத்தினை பாவனையாளர்களிற்கு வழங்குகின்ற நன்மைகள் காரணமாக பெற்றுள்ளன. பைத்தன் கணினி மொழியானது இன்றைய தகவல் தொடர்பாடல் உலகில் தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பியல்புகள் காரணமான ஏனைய கணினி மொழிகளுடன் போட்டியிட்டு பிரபலமாகி வருகின்ற ஒரு கணினி மொழியாகும்.



Mr.G.Kumaran,
Teacher,
Kaithady MMV
MBA , BBA (Hons), PGDE, HNDIT, DICT, MCSE, MCSA

இக் கணினி மொழியானது அபிவிருத்தியடைந்த நாட்டு பல்கலைக்கழகங்களில் ஒரு பிரதான பாடமாக கணினி விஞ்ஞானத்தை அலங்கரிக்கின்றது. அதே போல எமது நாட்டிலும் உயர் தர கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாட கலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டும் க.பொ. த. (சா/ த) கலைத்திட்டத்திலும் உள்வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பைத்தன் கணினி மொழியானது ஹய்டோ வான் றோசும் (Guido van Rossum) என்பவரால் 1980 ஆண்டு காலப்பகுதியில் கோட்பாட்டு ரீதியான எண்ணக் கருக்களுடன் ஆரம்பித்து 1989ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் செயல்படுத்த அறிமுகம் செய்யப்பட்டு 1991 ஆம் ஆண்டு நடைமுறைப் பயன்பாட்டிற்கு வெளியீடு செய்யப்பட்டது.

ஏனைய கணினி மொழிகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது இம் மொழியில் காணப்படுகின்ற சிறப்பியல்புகளை பின்வருமாறு நோக்கலாம்.

பைத்தன் கணினி மொழியானது கட்டற்ற மென் பொருள் வகையைச் சார்ந்ததாகவும் மிகவும் வினைத் திறன்மிக்க கணினி மொழியாகவும் குறைந்த எண்ணிக் கையிலான குறியீட்டு நிரைகளை உள்வாங்கி வேகமாக வெளியீட்டினை தரக்கூடிய வகையிலும் காணப் படுவதுடன் இக்கணினி மொழியானது பொது நோக்கம் கொண்ட உயர்மட்ட கணினி (General-purpose, High-level programming language) மொழியாகவும் தெளிவான குறியீடுகளையும் (Syntax) அவற்றுகான பரந்தளவான நூலக (Library) அமைப்புக்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக முறைமைகளின் (System) மாறும் தன்மைக்கேற்ப (Automatic memory management) தன்னிச்சையான நினைவக முகாமையையும் உள்ளடக்கியுள்ளது.

Scripting language ஐ அதிகளவில் இக் கணினி மொழி உள்வாங்கியுள்ள போதிலும் Non-scripting குறியீடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. பைத்தன் குறியீடு தொகுதியினை தனியான இயங்குதிறன் மிக்க பொதிகளாக்கி பயன் படுத்தக்கூடியதாக காணப்படுகின்றன. இக் கணினி மொழியினை வெவ்வேறு பணிச்செயல் முறைமைகளுக்கேற்ப இயங்கச் செய்ய பல்வேறு மொழி மாற்றிகள் உருவாக் கப்பட்டுள்ளன. மேலும் பைத்தன் கணினி மொழியானது Strong server side scripting language ஆகவும் காணப்படுகின்றன.

பைத்தன் மொழியின் கோப்பு நீட்சிளாக (file extension). pyc, .pyd, .pyo எனும் வடிவங் களில் காணப்படுகின்றன.


எந்த ஒரு கணினி மொழியிலும் சிறப்புதேர்ச்சி உள்ள வராக உருவாக வேண்டுமென்றால் அவற்றை செய்முறை மூலம் கற்று சிறிய பிரயோகங்களில் ஆரம் பித்தாலே பெரிய கருத்திட்டங்கள் வரை வெற்றிகர மாக நடைமுறைப்படுத்தமுடியும். கணினி மொழி கட்டமைப்புகள் அடிப்படையில் ஒரே தன்மை வாய்ந்த வையாக காணப்பட்டாலும் ஒவ்வொரு கணினி மொழியிலும் காணப்படுகின்ற நுட்பங்களை மிக சாதுரியமாக கையாளுவது கணினி புரோகிராம்கள் செயற்படும் போது ஏற்படும் வழுக்களையும் (Syntax error) அதிகளவு நேரத்தையும், மூளையின் தேவையற்ற பயன்பாட்டினையும் (Physics cost) குறைக்கமுடியும்.



இத் தொடர் கட்டுரையில் பின்வரும் தலைப்புகளின் கீழ் விடயங்கள் விளக்கமாக விபரிக்கப்படவுள்ளன . எப்படி எமது கணினியில் பைத்தன் மென்பொருளினை நிறுவுதல்


- பைத்தன் கணினி மொழியின் அடிப்படை குறியீடுகள்
- மாறிகளும் மாறிலிகளும் வரையறைசெய்தல்
- Strings and their Uses
- Comparison operators
- Loops and conditions (for, while,if….)
- Functions
- Lists, Tuples, and Dictionaries
- Classes
- Modules
- File input /output function
- Error Handling
- Simple examples

பைத்தன் கணினி மொழியினை எமது கணினியில் எப்படி நிறுவி (install) இயங்கச் செய்வது என்பதை தெளிவாக பார்ப்போம். முதலில் உங்கள் கணினியில் நிறுவியுள்ள இயங்குதளத்தினைத் (OS) தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளுங்கள். உதாரணமாக படம் 1 இல் OS-Windows 7 , System type 64 bit.





படம் 1

பின்னர் http://www.python.org என்ற இணைய முகவரிக்கு சென்று படம் 2இல் உங்கள் operating system இற்கு பொருத்தமான மென்பொருளை தரவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ளுங்கள். ( Python 3.4.3 )




படம் 2


Run என்ற பட்டினை (படம் 3) சொடுக்கி தொடர்ந்துவரும் கட்டளைகளில் பொருத்தமானவற்றை தெரிவுசெய்வதன் மூலம் நீங்கள் உங்கள் கணினியில் இம் மென்பொருளினை நிறுவிக்கொள்ளமுடியும்.




படம் 3

வளரும்...

# மின்னஞ்சல் முகவரியை பாதுகாக்க சில வழிகள்



இன்றைய இணைய உலகம் hackers எனப்படும் இணையத் திருடர்களின் கைகளில் இருக்கிறது. அவர்கள் நமது தகவல்களை திருடுவதற்கு பயன்படுத்தும் வழிகளில் ஒன்று மின்னஞ்சல் முகவரி. அவர்கள் spam எனப்படும் தேவையில்லாத மின்னஞ்சல்களை அனுப்பி நம்மை சிக்க வைப்பார்கள். முழுவதுமாக நம்மால் பாதுகாக்க முடியாவிட்டாலும், முடிந்தவரை பாதுகாக்க இருப்பதற்கும் சில வழிகள் உள்ளன.

1. உங்களுடைய மின்னஞ்சல் முகவரியை உங்கள் தளங்களிலோ, அல்லது வேறு தளங்களிலோ பதிவு செய்யாதீர்கள். அப்படி பதிவு செய்ய விரும்பினால் username@gmail.com என்பது போல கொடுக்காமல் படமாகவோ(images) வேறு விதமாகவோ கொடுக்கலாம். உதாரணத்திற்கு username[at]gmail.com. ஏனெனில் இணையத்தில் பரவிக் கிடக்கும் மின்னஞ்சல் முகவரி களைச் சேகரிப்பதற்காகவே நிறைய மென்பொருட்கள் இருக்கின்றன. அவைகள் @ என்பதற்கு முன்னும், பின்னும் வார்த்தைகள் இருந்தால் அதனை மின்னஞ்சல் முகவரி என்பதை கணித்து சேகரிக்கும்.

2. சில தளங்களில் Newsletter-இல் சேருமாறும், அல்லது சில கோப்புக்களை பதிவிறக்கம் செய்ய மின்னஞ்சல் முகவரி கொடுக்கவும் சொல்லும். அவற்றைக் கொடுக்கும் முன் அந்த தளம் நம்பகமானது தானா என்பதைச் சரி பார்த்து கொடுக்கவும். ஏனெனில் சில தளங்கள் அவ்வாறு சேகரித்த தகவல்களை மற்றவர்களுக்கு விற்கவும் வாய்ப்புள்ளது.

3. Gmail, Yahoo போன்றவற்றை செல்பேசியில் பயன்படுத்துவதற்காக Nimbuzz, Fring போன்ற செல்பேசி மென்பொருள்கள் அதிகம் கிடைக் கின்றன. இவைகளை பயன்படுத்த வேண்டுமெனில் நாம் Google, Yahoo ஆகியவற்றின் Username, Password-ஐ கொடுக்க வேண்டும். இப்படி கொடுப்பதினால் எந்நேரமும் நமது கணக்கு திருடப்படலாம். எந்த நிலையிலும் இது போன்ற மூன்றாம் தரப்பு மென்பொருள்களை பயன் படுத்தாதீர்கள்.

4. சில சமயங்களில் நமக்கு வித்தியாசமான மின்னஞ் சல்கள் நமக்கு வரும். நமக்கு பரிசு போட்டியில் பணம் கிடைத்திருப்பதாகவும், நமது மின்னஞ்சல் முகவரிக்கு பரிசு விழுந்திருப்பதாகவும் வரும். சில சமயம் ஆபாச மின்னஞ்சல்களும் வரும். அது போன்ற மின்னஞ்சல் களை உடனே அழித்துவிடுங்கள். அது போன்ற மின்னஞ்சல்கள் நமது வங்கி கணக்கு உள்ளிட்ட தகவல்களைக் கேட்கும். அப்படி நாம் கொடுத்துவிட்டால் அவ்வளவுதான்! பிறகு நமது பணம் களவாடப்படும்.

5. எமது கணினி தவிர்ந்த சாதனங்களில் மின்னஞ்சல் பார்ப்பதாக இருந்தால் உதரணமாக Browsing Center சென்று மின்னஞ்சல் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட் டால் "Keep Me signed in", "Keep me logged in" என்பதினை சொடுக்காமல் உள்நுழையவும். மின்னஞ்சல்களை பார்த்துவிட்டு வெளிவரும் போது Sign Out செய்ய மறவாதீர்கள்.

முடிந்தவரை வருமுன் காப்பதே சிறந்தது. உங்கள் மின்னஞ்சல் முகவரி பத்திரம்....)

# செலுத்துகை ஊடகங்கள் (Transmission Media)

கம்பிவழி இணைப்பு, கம்பியில்லா இணைப்புக்களில் பயன்படுத்தப்படும் செலுத்துகை ஊடகங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**1. திருகப்பட்ட கம்பிச்சோடி / முறுக்கிய கம்பிச் சோடி** (Twisted Pair)


திருகப்பட்ட கம்பிச்சோடி என்பது ஒன்றுடனொன்று திருகப்பட்டிருக்கும் இரு கம்பிச்சோடிகளாகும். ஒரு ஒழுங்கான திருகு சுருள், முன் வரைவிலுள்ள காவலிடப்பட்ட இரு செப்புக்கம்பிகளாகும். ஒரு தனித்த தொடர்பாடல் இணைப்பாக கருதப்படும். புதிய LAN (உள்ளகவலைபரப்பு) இன் பயனுறுனிலை இணைப்புக் களுக்காக விரும்பப்படும் பிரபல்யமான ஒன்றாக திருகப்பட்ட கம்பிச்சோடி கணப்படுகிறது. செலுத்தல் குணாம்சங்களின்படி இரு வகையான திருகப்பட்ட கம்பிச்சோடிகள் காணப்படுகின்றன. கவசமிடப்பட்ட திருகப்பட்ட கம்பிச்சோடி (Shielded Twisted Pair – STP) கவசமிடப்படாத திருகப்பட்ட கம்பிச்சோடி(Unshielded Twisted Pair – UTP)

**அனுகூலங்கள் :**


விலை அதிகமற்றது, இலகுவாகக் கிடைக்கக் கூடியது. பெரும்பாலான தொலைபேசித் தொகுதியில் காணப் படுகிறது.

**பிரதிகூலங்கள் :**

ஏனைய ஊடகங்களைபோல் (ஓரச்சு வடம்) உயர்கதியை கொண்டிராது. வானொலி அதிர்வெண், மின் காந்தவியல்




அதிர்வெண் குறுக்கீடுகளை உணர்திறனுடையது. ஏனைய ஊடகங்களைபோல் (ஓரச்சு வடம்) நீடித்து உழைக்காது.





**2. ஓரச்சு வடம்** (Co – axial Cable)

இந்த வடமானது ஒரு மைய அச்சுக்கானது என கூறப்படும். ஏனெனில் ஓர் பொதுவான அச்சினையே இரண்டு கடத்திகளும் பகிர்ந்து கொள்ளும். இது ஒரு ஒற்றை உள்ளகத்தையும் அதன் மேற்போர்வையாக செயற்படும் வெளியக கடத்தியாகவும் இருக்கிறது. சமிக்ஞையானது உள்ளகத்தின் மீது பரப்பப்படும். உள்ளகம் மற்றும் வெளியகம் ஒரு காவலியினால் தனியாக்கப்பட்டுள்ளன.

**அனுகூலங்கள் :**


வானொலி அதிர்வெண், மின் காந்தவியல் அதிர்வெண் கொஞ்சம் எதிர்ப்பானது. திருகப்பட்ட கம்பிச்சோடியை விட நீடித்து உழைக்கக்கூடியது. திருகப்பட்ட கம்பிச்சோடியை விட கதியை அதிகமானது.




**பிரதிகூலங்கள் :**

திருகப்பட்ட கம்பிச்சோடியை விட விலை கூடியது, கடுமையான குறுக்கீடுகளை உணர்திறனுடையது.

### 3. ஒளியிழை நார் (Fiber Optics)



இவை ஒரு மெல்லிய கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் இழைநார்கள் ஊடாக தரவைச் செலுத்துவதற்கு ஒளியலைகளை பயன்படுத்துகின்றன. இது ஒளிக் கீற்றுகளின் செலுத்துகை துடிப்புகளிலுள்ள நூற்றுக் கணக்கான கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் கம்பிகளை கொண்டதாகும்.


**அனுகூலங்கள் :**

வானொலி அதிர்வெண், மின் காந்தவியல் அதிர்வெண் என்பவற்றிற்கு எதிர்ப்பானது. உயர்ந்த பாதுகாப்புத் தன்மை உடையது, மிகவும் நீடித்து உழைக்க கூடியது.

**பிரதிகூலங்கள் :**


உற்பத்தி சேவையை பொறுத்தமட்டில் மிக மிக செலவு கூடியது. அமைப்பு ஏற்பாடு வடிவமைப்பு என்பவை மிகவும் சிக்கலானவை. வழிப்படுத்தப்படாத ஊடகங்கள் (Unguided Media) /கம்பியில்லா ஊடகங்கள் (Wireless Media) பௌதீகரீதியான வடமாக்கல் போன்ற கட்டுப்பாடு களுடனல்லாது வலையமைப்புக்களில் தரவுகளை தொடர்பாட முடியும் என்ற கனவு உண்மையென்பதை உணரலாம். இவை கம்பியில்லாத தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன. இரு பிரதான கம்பியில்லாத தொழில்நுட்பங்களாக வானொலி செலுத்துகை, செங்கீழ் கதிர் செலுத்துகை என்பன காணப்படுகின்றன.

### 1. வானொலி செலுத்துகை




இவை இலகுவாக ஊடுருவிச்செல்லக்கூடியது. வானொலியானது அதன் கதியால் வரையறை செய்யப்பட்டிருந்தும் பல மேல் கணனிகளுக்கான தெரிவு முறையாகவுள்ள கம்பியில்லா செலுத்துகையாகும்.

### 2. செங்கீழ்கதிர் செலுத்துகை




இவை மிக குறைந்த மீழ்றனை கொண்ட ஒளியலைகளை தரவு ஊடுகடத்துவதற்கு பயன்படுத்தலாம். இவை சுவர் தளங்களை ஊடுருவிச்செல்ல முடியாதவை. இன்று தொடுப்பில்லாத விசைபலகை, அச்சியந்திரம் என்பவற்றில் இது பயன்படுத்தப்படுகிறது.





Microwave transmission

### 3. நுண்ணலை செலுத்துகை

நீண்ட தூரத்துக்கான தரவுகளை ஊடுகடத்துவதற்கு பயன்படும். இது ஒரு குறுகிய அலை நீளம் கொண்ட அதிர்வெண் கதிராகும்.


### 4. செய்மதி மூலமான செலுத்துகை

செய்மதி மூலமான செலுத்துகைகளுக்கான சமிக்ஞைகள் ஆகாய வெளியில் 500 - 22000 வரையிலான உயரத்தில் உள்ள செய்மதிகளுக்கு அனுப்பப்படும்.



Satellite

# வலையோடி பதில்கள்



### பதிரூபன், வேலணை

**கேள்வி:** வைரஸ் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, இயங்குதளத்தை, Service Pack கொண்டு மேம்பாடு செய்யச் சொல்லப்படுகிறது. மேம்பாடு செய்வதற்கும், வைரஸ் அழிப்பதற்கும் என்ன சம்பந்தம்? அதற்காகத் தானே Anti Virus தொகுப்புகள் உள்ளனவே ?

**பதில்:** மேம்பாடு என்பது, வரும் முன் காப்பது. வந்தபின் மேற்கொள்ளும் வைத்தியமே Anti Virus பயன்பாடு. உலாவியில் வைரஸ்கள் நுழையக்கூடிய இடங்கள் அவ்வப்போது கண்டுபிடிக்கப் பட்டு அவற்றைச் சரி செய்திட இந்த மேம்பாடுகள் வழங்கப்படுகின்றன. எனவே மேம் பாடு செய்யப்படாதுவிட்டால் அந்த குறைகள் உள்ள இடங்கள் வழியாக வைரஸ்கள் நுழைய வாய்ப்புகள் அதிகமாகின்றன. எனவே மேம்பாடு செய்து வரும் முன் காத்துக் கொள்வது நல்லது தானே.

### சிவநேசன், ஊரெழு, யாழ்ப்பாணம்.


**கேள்வி:** System crash ஆகி கோப்புகள் தொலையக் கூடாது என்பதற்காக ஒரே கோப்பினை C:, D:, E: என எல்லா drive களிலும் backup எடுத்து வருகிறேன். இப்போது இந்த duplicate கோப்புகளை அழிக்க நான் விரும்புகிறேன். ஏதேனும் இதற்கான பிரத்தியேக மென் பொருள் குறித்து சொல்லவும் அல்லது வேறு வழிகளைக் கூறவும்.

**பதில்:** உங்கள் முயற்சியும் திட்டமும் நல்லதுதான். ஆனால் dish space குறைகையில் duplicate கோப்புகளை நீக்கவே விரும்புவோம். கோப்புகளைப் பாதுகாக்க வேறு வழிகளையும் நீங்கள் பின்பற்றலாம்.

இணையத்தில் இலவசமாகக் கிடைக்கும் Double Killer என்ற இலவச மென்பொருளை நீங்கள் பயன்படுத்தலாம். உங்கள் கணினியிலுள்ள duplicate கோப்புகளை எல்லாவற்றையும் அது கண்டுபிடித்து தரும். வேண்டியன வற்றை வைத்துவிட்டு தேவையற்றவற்றை நீங்கள் அழிக்கலாம். இந்த மென்பொருளை http://doublekiller.en.softonic.com தொடுப்பினூடாக பதிவிறக்கிக் கொள்ள லாம்.

### ரம்யுதீன், பொத்துவில்

**கேள்வி:** Wndows XP பயன்படுத்துகிறேன். சிஸ்டம் பைல் களைப் பார்க்கையில் C:/windows கீழ் Prefetch என்ற போல்டர் உள்ளது. அதிலுள்ள கோப்புகள் தேவை யற்றவை, வைரஸ்களால் உருவானவை என்று எண்ணி அழித்தேன். ஆனால் மீண்டும் அவை உருவாகியுள்ளன. என்ன வகை வைரஸ் இதனை ஏற்படுத்துகிறது? எப்படி நீக்கலாம்?




**பதில்:** இவையெல்லாம் windows இயக்கம் வேகமாகத் தொடங்கப்பட வேண்டும் என்பதற்காக உருவாக் கப்பட்ட system கோப்புகள். Windows XP தான் அந்த கோப்புக்களை உருவாக்குகிறது. எனவே அந்த கோப்புகள் இருந்துவிட்டு போகட்டும். மீறி நீங்கள் அழித்தால் அந்த கோப்புகளை பழையபடி windows உருவாக்கிவிடும்.

## கார்த்திகேசு, இளவாலை, யாழ்ப்பாணம்.

**கேள்வி:** எனக்கு MS Excel இல் ஆண்டு, மாதம், தேதி ஆகிய வற்றை கொடுத்தால் அதற்கான கிழமை என்னவென்று செல்லில் தெரிய வேண்டும். இதற்கான formula என்ன எனத் தருவீர்களா?

**பதில்:** 2009-வது ஆண்டு 3-வது மாதம், 30-ம் தேதி என்ன கிழமை எனத்தெரிய வேண்டுமானால் ஏதாவது cell இனுள் "=DATE(2009,03,30)" என்ற formula இனைக் கொடுங்கள். கிடைக்கிற விடையை right click செய்து Format Cells கட்டளையைத் தேர்வு செய்யுங்கள். Number Tab ஐ கிளிக் செய்து அதிலுள்ள Custom என்பதை Category இன் கீழ் தேர்வு செய்யுங்கள். Type என்பதில் dddd என டைப் செய்து OK செய்யுங்கள். கிழமை தெரியும்.




## செந்தாளன், வெள்ளவத்தை, கொழும்பு.

**கேள்வி:** ஒரு கோப்பிற்கு கடவுச்சொல் கொடுக்கப்பட்டால் அதனைத் திறக்காமல் அச்சிட வழி உண்டா?

**பதில்:** எந்த பைலையும் திறந்து இயக்கத்திற்குக் கொண்டு வந்த பின்னரே அதனை அச்சிட முடியும். ஏதேனும் புரோகிராம் எழுதி அதனை அச்சிட முயற்சித்தாலும் அதற்கு பாஸ்வேர்ட் கொடுக்கப்பட்டிருந்தால் புரோகிராம் முடங்கி நின்றுவிடும்.


## வாசகர்களே !

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களுக்கு "வலையோடி" பதில் தரக் காத்திருக்கிறார். கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி

**"வலையோடி"**
**கம்யூட்டர் ருடே**
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
info@computertoday.lk

உங்கள் வினாக்களுக்கு உடனுக்கு உடன் விடை தரவும் காத்திருக்கிறார் வலையோடி, அதற்காக நீங்கள் செய்யவேண்டியது https://www.facebook.com/computertodaytamil முகபுத்தகப் பக்கத்திற்குச் சென்று அங்கு உங்கள் சந்தேகங்களை, வினாக்களை பதிவு செய்வது மட்டுமே. விடைகள், விளக்கங்கள் உடனுக்குடன் உங்களைத் வந்தடையும்.


குறிப்பு : அஞ்சல், மின்னஞ்சலில் வரும் வினாக்களுக்கான விடைகள் மட்டுமே புத்தகத்தில் பிரசுரிக்கப்படும்.




# Whatsapp Last Seen மறைக்க

WhatsApp பயன்படுத்துபவர்கள் அனைவருக்கும் பிடிக்காத ஒரு விஷயம் என்றால் அது 'Last Seen' என்ற ஒன்று தான். இது நாம் எப்போது கடைசியாக WhatsApp-ஐ பயன்படுத்தினோம் என்று நம் நண்பர்களுக்கு தெரியப்படுத்தும் ஒரு வசதி. இதை மறைக்க ஒரு வழி உள்ளது எப்படி என்று இங்கே பார்ப்போம்.


ஏற்கனவே WhatsApp பயன்படுத்துபவர்கள் அதை தற்போதைய புதிய பதிப்புக்கு Update செய்து கொள்ள வேண்டும். எந்த பதிப்பு என்று பார்க்க WhatsApp >> Settings >> About செல்லவும். இப்போது WhatsApp Settings பகுதியில் கீழே படத்தில் உள்ளபடி Account என்று உள்ளதை சொடுக்கவும்.





அடுத்து கீழே படத்தில் உள்ளபடி Privacy என்று உள்ளதை சொடுக்கவும்.




Privacy பகுதியில் முதல் வசதியாக படத்தில் உள்ளபடி Last Seen என்பது இருக்கும். அதைச்சொடுக்கவும்.





இதில் மூன்று வசதிகள் இருக்கும். Everyone, My Contacts, Nobody என்று. படத்தில் உள்ளபடி Nobody என்பதை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும்.





இனியாராலும்நீங்கள் கடைசியாக எப்போது WhatsApp-ஐ பயன்படுத்தினீர்கள் என்பதைப் பார்க்க முடியாது. அதே போல உங்களாலும் உங்கள் நண்பர்கள் கடைசியாக எப்போது WhatsApp ஐ பயன்படுத்தினார்கள் என்பதை பார்க்க முடியாதுங்கோ....... .

# சிறு நிறுவனங்களுக்கான இலவச Accounting மென்பொருள்




**சி**றிய நிறுவனங்களை வைத்திருப்பவர்கள் வரவு செலவுக் கணக்குகளை ஏடுகளில் எழுதி அல்லது Excel மென்பொருளில் ஏற்றி சரிபார்த்து வருவார்கள். இல்லையெனில் கணக்கீட்டு மென்பொருளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். அப்படியே வாங்கினாலும் அந்த மென்பொருள் Accounts தெரியாதவர்களுக்கு எளிமையாக புரிந்துவிடாது. எளிமையாகவும் இலவசமாகவும் கணக்கீட்டு மென்பொருள் கிடைத்தால் நன்றாக இருக்குமல்லவா?

அது தான் Manager என்ற இலவச மென்பொருள். இது சாதாரண நபர்களும் எளிமையாக உபயோகிக்கும் படி இந்த மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளின் மூலம் நிறுவனத்தின் வரவு செலவு (income and expense), சொத்துகள், கடன்கள், பொருள்





விற்பனை, வரி பிடித்தம் போன்றவற்றை எளிதாக தெரிந்து கொள்ளலாம். இவற்றை Summary பக்கத்தில் எல்லாமே தொகுத்து ஒரே இடத்தில் காணலாம். மேலும் Balance Sheet, Profit and Loss, Ledger Summary போன்றவை புரியும்படி அறியலாம்.

Bank Accounts, Cash Accounts தனியாக கையாளவும் அதிலிருந்தே பணம் வரவினை Receive Money கொடுத்து ஏற்றலாம். பணம் பிறருக்கு கொடுப்பதினை Spend Money இலும் வங்கியிலிருந்து பணம் எடுப்பதினை Transfer Money இலும் ஏற்றலாம். மற்ற மென்பொருள்களிலுள்ள Payment, Receipt போன்ற குழப்பங்கள் இதில் கிடையாது.

மேலும் இதில் Sales Quotes, Sales Invoices, Purchase Orders, Purchase Invoices, Suppliers and Customers management போன்றவையும் இருக்கின்றன. இதனை தனி நபர்களும் வரவு செலவுக் கணக்கறிய பயன்படுத்தலாம். Accounts தெரியாதவர்களுக்கும் இந்த மென்பொருள் நிறைய விசயங்களை எளிமையாக கற்றுக்கொள்ள உதவுகிறது.

தரவிறக்கச் சுட்டி : http://www.manager.io/

# போட்டோக்களின் Capacity [அளவு] ஐ குறைப்பதற்கு




நண்பர்களுக்கு எங்கள் படங்கள், புகைப்படங்களை (Images, Photos) மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ பகிர்ந்து கொள்ளும்போது அவை மிகப்பெரிய அளவுகளில் இருந்தால் எம்மால் சிலவேளைகளில் பகிர்ந்துகொள்ளவோ அனுப்பவோ முடியாதநிலை ஏற்படும். அத்தகைய இடையூறுகளை தவிர்த்துக் கொள்வதற்கென பிரத்தியேகமாக ஒரு இலவச மென்பொருள் உள்ளது.

மிகப்பெரிய அளவிலான (Capacity) படங்களின் அளவுகளை அவற்றின் தன்மை மாறாமல் (Resolution) மிகக் குறைந்தளவில் படங்களை, புகைப்படங்களை சுருக்கிக்கொள்ளலாம். RIOT (Radical Image Optimization Tool) எனப்படும் இந்த மென்பொருளானது 1MB க்கும் குறைவான அளவில் கிடைப்பதால் மிக இலகுவாக தரவிறக்கி உங்கள் கணினியில் நிறுவிக்கொள்ளலாம். உங்கள் தேவைக்கேற்ப சுருக்கும் படங்களின் அளவுகளை நீங்களே தீர்மானித்துக்கொள்ளலாம். படங்களின் அளவுகளை சுருக்குவதற்கான திறன்வாய்ந்த பயனுள்ள மென்பொருள்.

மென்பொருள் தரவிறக்க இணையச்சுட்டி: http://luci.criosweb.ro/riot/


## Advertisment Rate Card

**In Pages**

| Size | Full Colour | One Colour |
|---|---|---|
| Full Page (21.1cm x14.2cm) | 15,000 | 7,000 |
| Half Page (10.5cm x 14.2 cm) | 10,000 | 4,000 |
| 1/4 page (10.5cm x 7.1 cm) | 6,000 | 2,500 |
| Strip (4cm x 14.2cm) | 6,000 | 2,500 |
| Box (4cm x 7.1 cm) | 5,000 | 1,500 |

**Cover Page Full Colour**

Back - Rs. 25,000
Front in - Rs. 22,500
Back in - Rs. 20,000

கம்ப்யூட்டர் ருடே கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

# Delete பண்ணமுடியாதவாறு Fileகளை எவ்வாறு உருவாக்குவது ?


முக்கியமான ஆவணங்கள் அடங்கிய கோப்புக்களை (Folders) மற்றவர்கள் அழிக்க முடியாதவகையில் மிக இலகுவான முறையில் எந்த மென்பொருளின் உதவியுமின்றி உருவாக்கலாம்.


இத்தகைய கோப்புக்களை (Undeleteable Folders) DOS Command Prompt மூலமாக மட்டும்தான் உருவாக்க முடியும். அத்தகைய கோப்புக்களை சாதாரணமாக எவரும் அழிக்கமுடியாது. அவ்வாறு அழிப்பதாயின் DOS Command Prompt வழியே சென்றுதான் அழிக்கமுடியும்.

இதோ அதற்கான வழிமுறைகள்.


1. முதலில் DOS Command Prompt ஐ திறவுங்கள்.(Open DOS Command prompt)

   (Start>Run>(type) 'cmd' )






2. பின்னர் கோப்பு (folder) சேமிக்கவேண்டிய இடத்தினை (C: or D:) தெரிவு செய்த பின்னர் Command Prompt இல் 'md\aux\' என்றவாறு தட்டச்சு செய்யுங்கள். (கோப்புக்களை உருவாக்க நீங்கள் (aux, lpt1, con, lpt5) போன்ற பெயர்களைமட்டுமே பாவிக்க முடியும்.)




3. தற்பொழுது aux என்ற கோப்பானது (folder) உங்கள் கணினியில் நீங்கள் தெரிவுசெய்த இடத்தில் (directory: C: or D:) சேமிக்கப்பட்டிருக்கும்.



4. தற்பொழுது அந்த கோப்பினை அழிக்க முயற்சி செய்து பாருங்கள். அது கீழே உள்ளவாறான தகவலை உங்களுக்கு தரும் ( Error Message).




5. இத்தகைய கோப்புகளை உருவாக்குவதற்கான பிற பெயர்கள். ( நீங்கள் கோப்புக்களை உருவாக்க வேண்டுமாயின் இத்தகைய பெயர்களையே பாவிக்க வேண்டும்.)

   lpt1 (உதாரணம்: md\lpt1\),CON, lpt5, aux

6. கோப்பை அழிக்க வேண்டுமாயின் rd\aux\ என்ற வாறு தட்டச்சு செய்யுங்கள்.

எங்கே நீங்களும் ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள்.

# உங்கள் LAP TOP OVER HEAT ஆகிறதா?



இன்றைய காலத்தில் laptop பாவனையாளர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டு இருக்கிறது. அந்த வகையில் 9% மேற்பட்ட பயனர்கள் சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சினை laptop over-heat ஆகுவது. முடிந்தவரை laptop over-heat ஆகுவதைத் தடுப்பது பற்றி இங்கே சில குறிப்புகள் தருகிறோம்.

**Power Setting :** பல laptop பயனர்கள் தமது Power Setting ல் High Performance என set செய்திருப்பார்கள். உண்மையில் High Performance இல் விட்டால் laptop இற்கு கிடைக்கும் மின் அதிகமாக வரும். இதனால் laptop சூடாகும்.

இதனை சரி செய்ய உங்கள் power setting இல் Power Saver Mode ஐ On செய்து பாவனை செய்யுங்கள்...

**அழுத்தக் காற்று (compressed air) :** நீங்கள் laptop பாவனை செய்யும் போது தூசியான இடங்களில் பாவிக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.. இதனால் தூசித் துணிக்கைகள் உங்கள் laptop இல் படியலாம். அதனை அகற்றுவதற்காக கணினியின் fan வேகமாக சுற்றும் போது அதிக வெப்பம் வெளிவிடப்படும். அதனால் சூடு அதிகரிக்கும்.. எனவே Compressed Air ஐ இடையிடையே laptop இற்கு அடியுங்கள். அப்போது உங்கள் laptop இல் படிந்த தூசிகள் அகற்றப்படும்...

**மேல்தளம் (surface) :** பலர் தமக்கு விரும்பியவாறு blanket, கட்டில் போன்ற இடங்களில் வைத்துப் பாவிப் பார்கள், அப்படிப் பாவிக்கும் போது அப்படிப்பட்ட மேல் தளங் கள் heat ஐ போகவிடாது மீண்டும் laptop உள்ளேயே தள்ளுகிறது.

எனவே, இப் பிரச்சினையை நிறைவேற்ற தட்டையான மேல்தளங்களில் பாவிக்கவும்.

உதாரணமாக மேசை...


**Cool Pad** நண்பர்களே.. இது தான் பொதுவாகப் பலரால் பாவிக்கப்படும் உபகரணம். வாங்க கொஞ்சம் சிலவாகும். ஆனால் பயனுள்ளது. இதைப் பாவிப்பது உங்களுக்கு over-heat ஆவதைக் குறைக்கலாம்.

தேவையற்ற நேரங்களில் laptop ஐ off செய்தல் வேண்டும். Hibernate பண்ணி வைப்பதை விட தேவை யற்ற நேரங்களில் stand by இல் விடாமல் shut down செய்வது நல்லது..


# உலகின் சிறிய கணினிகள்


Vensmile IPC00


முதன் முதலில் கண்டறியப்பட்ட கணினி மிகவும் பிரம்மாண்டமாகவும் அதிக இடத்தையும் எடுத்து கொள்ளுமளவு இருந்ததோடு பயன்பாடும் குறைவாகவே அளித்தது. ஆனால் இன்றைய காலத்தில் கணினிகள் மிகவும் சிறியதாக கிடைக்க ஆரம்பித்துவிட்டன. சிப் தயாரிப்பாளர்கள் அதிக திறன் கொண்ட processor மிக சிறிய வடிவில் இருக்குமளவு வடிவமைக்கின்றனர். உலகில் தற்சமயம் கிடைக்கும் மிகச் சிறிய கணினிகளின் பட்டியலை தான் பார்க்க இருக்கின்றீர்கள்.


Raspberry Pi


Intel NUC


Asus Chromebox

**Raspberry Pi :** $35 க்கு கிடைக்கும் இந்நிறுவனத்தின் சிறிய கணினிகள் smart phone கள் போன்றே Micro USB மூலம் சக்தியூட்டப்படுகின்றன.


Intel Compute Stick



Android Stick


Mintbox Mini

**Intel NUC :** Intel நிறுவனத்தின் NUC, Raspberry Pi கருவியின் விலையை விட பத்து மடங்கு விலை அதிகமாக இருக்கின்றது.



ZOTAC ZBOX


hp Stream Mini

**Asus Chromebox :** NUC I விட சற்று பெரிதாக இருந்தாலும் இந்த கருவி உங்களது உள்ளங்கையில் கச்சிதமாக பொருந்த கூடியவை என்பதோடு $160க்கு கிடைக்கின்றது.

**hp Stream Mini :** Intel® Celeron® processor 2957U, 2 GB Ram, 32GB M.2 SATA Solid State Drive கொண்டு விண்டோஸ் 8.1 மூலம் இயங்குவதோடு $180க்கு கிடைக்கின்றது.

**Mintbox Mini :** இந்த கருவியில் AMD A4 Micro-6400T SoC Processor, AMD Radeon R3 Graphics, 4GB Ram, SATA 64GB SSD வழங்கப்பட்டுள்ளது.

**Vensmile IPC00 :** Intel Atom Z3735F "Bay Trail" quad core processor, 2GB Ram, 32 GB eMMC + micro SD slot வசதியுடன் இருக்கும் இந்த கருவி விண்டோஸ் 8.1 மூலம் இயங்குகின்றது.


**ZOTAC ZBOX :** Vensmile கணினியில் இருப்பது போன்ற சிறப்பம்சங்கள் இருப்பதோடு $169க்கு கிடைக்கின்றது.


**Intel Compute Stick :** இந்தாண்டு நடைபெற்ற வாடிக்கையாளர் மின்சாதன விழாவில் அறிமுகப்படுத்தப்பட்ட Intel Compute Stick கணினிகளை Pen Drive வடிவில் வழங்குகின்றது.


**Android Stick :** கடந்த இரு ஆண்டுகளாக சந்தையில் கிடைக்கும் Android Stick களை பல நிறுவனங்கள் வழங்கி வருகின்றது.

கம்ப்யூட்டர் ருடேயில்
பிரசுரமாகும் ஆக்கங்களை
ஆசிரியரின் அனுமதியின்றி
பகுதியாகவோ, முழுமையாகவோ
மறுபிரசுரம் செய்ய இயலாது.

# TeamViewer
## என்ன என்பதை அறியுங்கள்





நண்பரின் My Computer பகுதி


நண்பரின் கணினியில் இருந்து உங்கள் File Transfer

உங்கள் கணினியில் அமர்ந்து கொண்டே எங்கோ இருக்கும் உங்கள் நண்பரின் கணினியை இயக்க முடியுமா? முடியும் என்ற வார்த்தையை பதிலாய் சொல்லுவதை விட. Team Viewer என்று பதில் சொல்லலாம். ஆம் Remote Control வசதியை முழுக்க முழுக்க இலவசமாக வழங்கும் Team Viewer மென்பொருள் பற்றி இன்று காண்போம்.

### Team Viewer என்றால் என்ன?

மேலே சொன்னது போல உங்கள் நண்பரின் கணினி அல்லது உங்கள் வீட்டு/அலுவலக கணினி போன்றவற்றை நீங்கள் இருந்த இடத்தில் இருந்தே இணைய இணைப்பின் மூலம் இயக்க வைக்கும் மென்பொருள் தான் இது. Remote Control வசதி மூலம் குறிப்பிட்ட கணினியில் இருக்கும் பிரச்சனைகளை நீங்கள் சரி செய்ய முடியும், அந்தக் கணினியில் உள்ள மென்பொருட்களை இயக்க முடியும்.

இதை தரவிறக்க தரப்பட்ட சுட்டிக்குச் செல்லவும் https://www.teamviewer.com. இப்போது இதை நிறுவிக் கொள்ளவும். நிறுவும்போது Non-Commercial Use என்பதை தெரிவு செய்யவும்.

### எப்படி இதை பயன்படுத்துவது?

Install செய்த நண்பர்கள் உங்கள் கணினியில் Team Viewer-ஐ Open செய்யவும். மேலே படத்தில் உள்ளது போல உங்களுக்கென ID & Password கொடுக்கப்பட்டு இருக்கும். அதை நீங்கள் உங்கள் நண்பருக்கு தந்தால் அவர் இணைய இணைப்பில் உள்ள உங்கள் கணினியை, இணைய இணைப்பு உள்ள அவரது கணினியில் இருந்து Access செய்ய இயலும்.

நீங்கள் Access செய்ய வேண்டும் என்றாலும் உங்கள் நண்பரின் இந்த தகவல்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உங்கள் நண்பர் கணினியின் Id தெரிந்தால் அதை Partner ID என்ற இடத்தில் கொடுத்து Connect To Partner என்று கொடுக்க வேண்டும். இப்போது வரும் குட்டி விண்டோவில் அவரது Password-ஐ தர வேண்டும். இப்போது உங்கள் நண்பரின் கணினி உங்கள் கண் முன் விரியும்.

இதில் இரண்டு வசதிகள் உள்ளன என்று சொல்லி இருந்தோம். இரண்டாவது File Transfer என்பது File களை Transfer செய்ய என்றும் சொல்லி இருந்தோம். இந்த File Transfer வசதி மூலம் நீங்கள் Access செய்யும் கணினியில் இருக்கும், உங்களுக்கு/அவருக்கு தேவைப்படும் File களை நீங்கள்/அவர் நேரடியாக உங்கள்/அவர் கணினிக்கு எடுத்துக் கொள்ளமுடியும். இதன் Screen Shot மேலே உள்ளது.

உங்கள் தனிப்பட்ட பயன்பாடுகளுக்கு இது இலவசம். உங்கள் password ஐ மாற்ற Teamviewer இனை திறந்து Refresh போன்ற பட்டன் (Password க்கு அடுத்து) சொடுக்கலாம். சில நேரங்களில் நீங்களே தொடர்பு கொள்ள வேண்டி இருக்கலாம். மாறும் Password வேண்டாம். நினைவில் உள்ள மாதிரி நீங்களே வைத்து கொள்ள அதே பட்டனில் Set Predefined Password என்பதில் இதை நீங்கள் செய்யலாம்.

இனி உங்கள் கணினியில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டும். உங்களுக்கு தெரியவில்லை என்றால் உங்கள் நண்பர் ஒருவரை இதன் மூலமே செயல்பட வைக்க முடியும்.

இதில் முக்கியமான விஷயம் உங்கள் கணினியை உங்கள் நண்பர் Access செய்யும் போது அதை நீங்கள் பார்க்க முடியும். அவர் Open செய்யும் ஒவ்வொன்றும் உங்கள் கணினி திரையில் தெரியும். எனவே பாதுகாப்பு பற்றி கவலைப்பட தேவை இல்லை. இருப்பினும் நம்பிக்கையான நபரை மட்டும் இது போன்ற செயல்களை செய்ய அனுமதியுங்கள். இதே போலவே File Transfer இற்கும்.

கம்ப்யூட்டர் ருடே
கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

உங்களின் அபிமான கம்ப்யூட்டர் ருடே யும்

வடமாகாண கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தும்

# மாபெரும் தகவல் தொழில்நுட்பப் போட்டிகள்!

## போட்டி நிபந்தனைகள் :

போட்டி கனிஷ்டபிரிவு, சிரேஷ்டபிரிவு, திறந்த பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும். தரம் 1 முதல் 8வரை கனிஷ்டபிரிவு, தரம் 9 முதல் 13 வரை சிரேஷ்டபிரிவு, ஏனையோர் திறந்த பிரிவு.

- நாட்டின் எப்பகுதியில் இருந்தும் பங்குபற்றலாம்.
- மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கான தனித்தனிப் போட்டிகள்
- பரிசில்கள் மற்றும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள்.
- கற்கும் வகுப்பினை உறுதிப்படுத்தும் பாடசாலை அதிபரின் ஒப்பம் இல்லாத விண்ணப்பங்கள் யாவும் திறந்த பிரிவு போட்டிகளிலேயே சேர்க்கப் படும்.
- விண்ணப்பங்கள் எமது கம்யூட்டர் ருடே புத்த கத்தில் தரப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்தி லேயே நிரப்பப்பட வேண்டும். நிழற்பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி வினாக்கள் யாவும் இணைய வினாக்கொத் தாகவே வழங்கப்படும் (Online Exam).
- போட்டியின் வினாக்கொத்தில் 40 வினாக்கள் இடம் பெறும். போட்டிக்கான நேரம் ஒரு மணித்தியாலம்.
- ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிக்கு பயனர் பெயரும், கடவுச் சொல்லும் கம்யூட்டர் ருடே இனால் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
- போட்டியாளர் தனது உள்நுழைவு அனுமதியை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தி போட்டியில் பங்குகொள்ள முடியும்.

குறிப்பிட்ட நாளில் போட்டியாளரின் உள்நுழைவு அனுமதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையுமே அனுமதிக்கப்படும். போட்டி நடைபெறும் திகதி மின்னஞ்சல் மூலம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்படும். ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் சந்தர்ப் பத்தில் மேலதிக போட்டி ஒன்றின் மூலம் முதல் மூன்று இடங்களும் தெரிவு செய்யப்படும்.

பங்குபற்றும் போட்டியாளர்களில் சித்திபெறு வோரிற்கு புள்ளியின் அடிப்படையில் 'கம்ப்யூட்டர் ருடே' மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

தொழில்நுட்பக் கோளாறுகளால் பாதிப்படையும் போட்டியாளர் கம்யூட்டர் ருடே உடன் தொடர்புகொண்டால் அவர்கள் மீண்டும் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிப்பது பற்றி 'கம்ப்யூட்டர் ருடே' இனால் முடிவெடுக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: ஜுலை, 30. 2015**

- **ஆசிரியரின் முடிவே இறுதியானது.**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

## விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் : ....................................................................................................

முகவரி/ பாடசாலை :....................................................................................................

கற்கும் வகுப்பு / வயது : ....................................................தொலைபேசி இல:....................................

மின்னஞ்சல் முகவரி : ....................................................................................................

.................................................. ..................................................

போட்டியாளர் கையொப்பம். அதிபரின் உறுதிப்படுத்தல்



# ubuntu?

## உபுண்டு என்றால் என்ன?

உபுண்டு என்பது ஒரு இலவச கணினி இயங்குதளமாகும். விண்டோஸ் இயங்குதளத்தைப் போன்று மிகச்சிறந்த வசதிகளைக் கொடுக்கும் ஒரு சுதந்திர இலவச மென்பொருளாகும். உலக அளவில் 20 மில்லியன் மக்களுக்கும் அதிகமானோர் பயன்படுத்தப்படும் ஓர் உயர்தர கணினி இயங்குதளமே உபுண்டு.

**விண்டோஸ் - உபுண்டு:**

விண்டோஸ் இயங்குதளத்தைக் காட்டிலும் உபுண்டு மேம்பட்டது. முற்றிலும் மாற்றியமைக் கப்படக்கூடியது. விண்டோஸ் இயங்குதளத்தில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது. வைரஸ்,Malware போன்ற நிரல்கள் உபுண்டு இயங்குதளத்தை அணுக முடியாத கட்டமைப்பைப் பெற்றுள்ளது. விண்டோஸ் இயங்குதளம் எந்த நேரத்திலும் வைரசால் முடக்கப்படும் வழுக்கள் நிறைந்துள்ள ஒரு அபாயகரமான இயங்குதளம்.

**உபுண்டுதான் சிறந்தது... !**

உபுண்டு இயங்குதள நிரலகங்களில் வேண்டிய மாற்றங்களை நாம் செய்துகொள்ள முடியும். எனவே மற்ற கட்டண இயங்குதளங்களைக் காட்டிலும் உபுண்டு இயங்குதளமே சிறந்தது.

உபுண்டு இயங்குதளமானது தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமானது கிடையாது. அது பொதுப்படையான திறந்தமூல சுதந்திர மென்பொருள் ஆகும்.

கணினியை இயக்க கிடைக்கப்பெறும் இலவச இயங்குதளங்களில் மிகச் சிறப்பானது முதன்மையானதும் உபுண்டு இயங்குதளமே..!

**உபுண்டுவின் புதிய பதிப்பைப் பெறுவதற்கு...**

உபுண்டு இயங்குதளம் தற்போது புதிய பதிப்பு வெளிவந்துள்ளது. இப்பதிப்பில் மிகச் சிறந்த வசதிகள் உள்ளன.

**அலைபேசியிலும் உபுண்டு**

galaxy nexus, galaxy nexus 4 உட்பட சில smart phone கள், desktop மற்றும் laptop ஆகியவற்றிலும் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதை சிறந்த வசதிகளாக குறிப்பிடலாம்.

முன்பு சோதனைப் பதிப்பாக கிடைத்த உபுண்டு இயங்குதளம், தற்பொழுது முழுமையான பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் இலவசம்.

உபுண்டு ஆனது தற்போது கணினிப் பயனாளிகளால் பரந்தளவில் பயன்படுத்தப்படும் ஒருதிறந்த மூல சுதந்திர மென்பொருளாகும். ஆகவே அதனைப் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும். "உபுண்டு" என்ற பதம் ஆனது ஆபிரிக்காவில் "பண்டு(bantu)" எனப்படும் பாரம்பரிய மொழியிலிருந்து. தோற்றம் பெற்றது. இதன் பொருள் ஆனது ஒன்றை மற்றையவற்றுடன் இணைப்பில் அல்லது தொடர்பில் ஏற்படுத்தும் வழிமுறை ஆகும்.

உபுண்டு ஆனது 2004 ஆம் ஆண்டு ஆபிரிக்க தொழிலதிபரான "மார்க் சற்றிள்வேர்த்" (Mark Shuttleworth) என்பவரின் சிந்தனையில் உருவானது. அவரது கனோனிக்கல் (Canonical )எனும் நிறுவனத்தின் மூலம் உபுண்டுவின் பதிப்புகள் வெளிவருகின்றன.

உபுண்டு ஆனது ஒரு திறந்தமூல சுதந்திர மென்பொருள் ஆகையால் அதனை பயன்படுத்தும் சாதனங்களின் எண்ணிக்கையும் உலகளாவிய ரீதியில் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. நாம் உபுண்டுவை இலவசமாக அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ள முடியும். அத்துடன் நமக்கு ஏற்றதுபோல் மாற்றம் செய்துகொள்வதற்கு ஏற்றவாறு , மொழிமாற்றம் செய்வதற்கு ஏற்றவாறும் அதன் source code வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே உபுண்டு. சமூகம்சார் மென்பொருளாக அழைக்கப்படுகின்றது.

கனோனிக்கல் நிறுவனமானது ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை உபுண்டுவின் புதிய பதிப்பினை வெளியிட்டு வருகின்றது. இப் பதிப்புகள் ஒவ்வொன்றும் Long Term Support (LTS) பதிப்புகளாகும். ஒவ்வொரு பதிப்புக்கும் பதிப்பு இலக்கமாக வெளியிடப்பட்ட ஆண்டு மற்றும் மாத இலக்கம் அத்துடன் பிரத்தியேக சொல்லாக காணப்படும். இக் சொற்கள் தொடர்ச்சியான ஆங்கில அகர வரிசையில் காணப்படும். அத்துடன் இச் சொற்கள் விலங்கு ஒன்றின் பெயரைக் குறிக்கும் . உதாரணத்திற்கு தற்போது நடைமுறையிலுள்ள பதிப்பான Ubuntu 14.04 LTS (Trusty Tahr) னைக் குறிப்பிடலாம்.


நாம் உபுண்டு பற்றி அறியவேண்டுமெனின் அதனுடன் தொடர்புடைய மற்றுமொரு சொல் "லினக்ஸ்" பற்றியும்




தெரிந்திருத்தல் அவசியம். ஆம் உபுண்டு ஆனது லினக்ஸினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. லினக்ஸ் ஆனது ஆரம்பகால இயங்கு தளமான யுனிக்ஸின் ஒரு பதிப்பாகும். லினக்ஸினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இயங்கு தளங்கள் அதிகளவில் நம்பிக்கைக்கும் பாதுகாப்பிற்கும் உறுதியளிக்கின்றன. ஆகவே தான் கணினி பயனாளிகளால் அதிகளவில் பயன்பாட்டிலுள்ள இணையத் தளங்களின் தரவுகளை சேமிக்கும் பிரதான servers களில் லினக்ஸ் பயன்படுகின்றது. கூகுள் மற்றும் youtube சேவர்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

உபுண்டு இயங்குதளத்தின் மூளையாக லினக்ஸ் கேணலினைக்(linux kernel) குறிப்பிடலாம். அதாவது லினக்ஸ் கேணல் ஆனது கணினியின் நினைவகப் பகுதியையும்(memory) செயற்பாட்டு நேரத்தினையும் (processing time) கட்டுப்படுத்துகின்றது.

உபுண்டுவை எமது கணினியில் நிறுவுவது மிகவும் இலகுவானது. உபுண்டுவின் உத்தியோகபூர்வ தளமான www.ubuntu.com/download இலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளலாம்.




நாம் தற்போது உபுண்டுவின் சிறப்பியல்புகளை ஏனைய இயங்குதளத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

நாம் விண்டோஸ் இயங்குதளம் பயன்படுத்தி அனுபவம் மிக்கவர்கள். விண்டோஸ்ஸை நிறுவியதன் பின்னர் நமக்கு அவசியமான மென்பொருட்களான word , excel உட்பட எமக்கு தேவையானவற்றை கொள்வனவு செய்தே நிறுவவேண்டும். ஆனால் உபுண்டுவில் இவை தொகுக்கப்பட்ட மென்பொருட்களாகும். உபுண்டுவை நிறுவும்போதே அவை நிறுவப்பட்டுவிடும்.

Anti Virus மென்பொருட்கள் நிறுவவேண்டிய அவசியமேயில்லை.

எமது தரவுகளை சேமித்து வைப்பதற்கு online storage ஆக Ubuntu one என்ற மேலதிக சிறப்பியல்பினைக் கொண்டது. இதன் மூலம் எமது கணினி வன்தட்டு பழுதடையும் நிலைமை ஏற்பட்டால் bachup ஆக பயன்படுத்திக் கொள்ள முடியும்.




| வரிசை | பதிப்பு | வெளியிடப்பட்ட திகதி | Code name | ஆதரவு |
|---|---|---|---|---|
| 1 | 4.10 | 20 அக்டோபர், 2004 | Warty Warthog | 30 ஏப்ரல், 2006 உடன் ஆதரவு முடிவடைந்துள்ளது |
| 2 | 5.04 | 8 ஏப்ரல், 2005 | Hoary Hedgehog | 31 அக்டோபர், 2006 உடன் ஆதரவு முடிவடைந்துள்ளது |
| 3 | 5.10 | 13 அக்டோபர், 2005 | Breezy Badger[4][5] | 13 ஏப்ரல், 2007 வரை |
| 4 | 6.06 | 1 ஜூன், 2006 | Dapper Drake[6][7] | மேசைக் கணினிகளுக்கு ஜூன் 2009, வழங்கிகளுக்கு 2011 |
| 5 | 6.10 | 26 அக்டோபர், 2006 | Edgy Eft[8][9] | ஏப்ரல் 2008 |
| 6 | 7.04 | 19 ஏப்ரல், 2007 | Feisty Fawn[10] | அக்டோபர் 2008 |
| 7 | 7.10 | 18 அக்டோபர், 2007 | Gutsy Gibbon[11] | ஏப்ரல் 2009 |
| 8 | 8.04 | 24 ஏப்ரல், 2008 | Hardy Heron[12] | மே 2013 |
| 9 | 8.10 | 30 அக்டோபர், 2008 | Intrepid Ibex[13] | ஏப்ரல் 2010 |
| 10 | 9.04 | 23 ஏப்ரல், 2009 | Jaunty Jackalope | அக்டோபர் 2010 |
| 11 | 9.10 | 29 அக்டோபர், 2009 | Karmic Koala | ஏப்ரல் 2011 |
| 12 | 10.04 | 29 ஏப்ரல், 2010 | Lucid Lynx | மேசைக் கணினிகளுக்கு ஏப்ரல் 2013, வழங்கிகளுக்கு ஏப்ரல் 2015 |
| 13 | 10.10 | 10 அக்டோபர், 2010 | Maverick Meerkat | ஏப்ரல் 2012 |
| 14 | 11.04 | 28 ஏப்ரல், 2011 | Natty Narwhal | அக்டோபர் 28, 2012 |
| 15 | 11.10 | 13 அக்டோபர், 2011 | Oneiric Ocelot | மே 2013 |
| 16 | 12.04 LTS | 26 ஏப்ரல், 2012 | Precise Pangolin[14] | ஏப்ரல் 2017 |
| 17 | 12.10 | 18 அக்டோபர், 2012 | Quantal Quetzal[15] | ஏப்ரல் 2014 |
| 18 | 13.04 | 25 ஏப்ரல், 2013 | Raring Ringtail[16] | சனவரி 2014 |
| 19 | 13.10 | 17 அக்டோபர், 2013 | Saucy Salamander | ஜூலை 2014 |
| 20 | 14.04 | 17 ஏப்ரல், 2014 | Trusty Tahr | 17 ஏப்ரல் 2019 [17] |
| 21 | 14.10 | 23 அக்டோபர் 2014 | Utopic Unicorn | 9 மாதங்கள் [18] |

உபுண்டுவை நிறுவுவதற்கு மிகவும் குறைந்தளவு வன்பொருள் தகைமையுள்ள கணினிகள் போதுமானது. அதாவது 768 MB RAM, 5GB வன்தட்டுப் போதுமானது.

ஏனைய இயங்குதளங்களிலும் பார்க்க அதிக பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றது.

இலகுவான பாவனைக்கு ஏற்ற இடைமுகத்தினைக்(GUI) கொண்டது.

உபுண்டு பல்வேறுபட்ட சிறப்பியல்புகளைக் கொண்டிருந்த போதிலும் சில குறைபாடுகளையும் கொண்டுள்ளது. அவற்றைப் பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

உபுண்டுவில் adobe photoshop மற்றும் Dream viewer போன்ற வர்த்தக ரீதியிலான மென்பொருட்கள் உள்ளடக்கப்படவில்லை.


உபுண்டுவில் driver supporting விண்டோஸ் இயங்குதளத்திலும் பார்க்க குறைவாகும்.

எல்லா விண்டோஸ் அடிப்படையான பயன்பாடுகள் மற்றும் மென்பொருட்களையும் உபுண்டுவில் நிறுவுவது கடினம்.

உபுண்டு பல்வேறுபட்ட தேவைகளுக்காக பல்வேறுபட்ட பதிப்புகளில் வெளிவருகின்றது. உதாரணமாக Ubuntu server version,edubuntu, mythubuntu என்பவற்றைக் குறிப்பிடலாம். நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று உபுண்டு ஆனது ஒரு சமூகம் சார்ந்த ஒரு (community-maintained operating system) இயங்குதளம். நாம் நமது தேவைக்கேற்ப அதனை மாற்றம் செய்வதன் மூலம் பயனடைவது மட்டுமன்றி உபுண்டு சமூகத்திற்கு எம்மாலான பங்களிப்பினையும் செய்யமுடியும். அதாவது புதிய யோசனைகள், தீர்வுகள் போன்றவற்றினை பகிர்ந்து கொள்ள முடியும். அதற்கு https://wiki.ubuntu.com/ContributeToUbuntu. என்ற இணையத்தளத்தின் மூலம் எமது பங்களிப்பினைச் செய்து கொள்ள முடியும்

மேலும் உபுண்டு பற்றிய மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்ள சுட்டி: http://ta.wikipedia.org/wiki/உபுண்டு_(இயக்குதளம்)

உபுண்டு இயங்குதளம் நிறுவுவது எப்படி என்பதைப் பற்றி அடுத்துவரும் இதழ்களில் பார்ப்போம்.



உங்கள் மனதில் தோன்றுவதை நான்கு வரிகளுக்குள் **கம்யூட்டர் ருடே** இற்கு எழுதி அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவை பிரசுரிக்கப்படும்.

கணினிகள் பல அளவுகளிலும் திறன்களிலும் இருக்கின்றன. ஒரு பக்கம் இருப்பவை மீக் கணினிகள் (supercomputers). இவை ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நுண் செயலிகளைக் (microprocessors) கொண்ட, மிகமிகச் சிக்கலான கணக்குகளைச் செய்யும் மிகப் பெரிய கணினிகள். இன்னொரு பக்கம் இருப்பவை cars, தொலைக்காட்சிப் பெட்டிகள் (TV), stereo systems, calculators, உபகரணங்கள் (appliances) போன்றவற்றில் பொதிக்கப்பட்ட மிகச் சிறிய கணினிகள் (tiny computers). இந்தக் கணினிகள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பணிகளை (Limited number of tasks) மட்டும் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டவை.

தனிநபர் கணினி (personal computer) அல்லது PC என்பது ஒரே சமயத்தில் ஒருவர் மட்டும் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இங்கு, பல்வேறு வகையான தனிநபர் கணினிகளை (personal computer) பற்றி பார்ப்போம்

**தனிநபர் கணினி வகைகள் :**

1. மேசைக் கணினி (desktops computers)
2. மடிக்கணினி (laptops)
3. கையடக்கக் கணினி (handheld computers) மற்றும்
4. Tablet PCகள்.




**1. மேசைக் கணினிகள் - desktop computers**

மேசைக் கணினிகள், மேசை மேல் வைத்துப் பயன் படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டவை. இவை பொதுவாகப் பிற வகை தனிநபர் கணினிகளை (other types of personal computers) விடப் பெரிதாகவும் சக்தி வாய்ந்தவையாகவும் இருக்கும். மேசைக் கணினிகள் தனித்தனி உபகரணங்களால் ஆனவை. பிரதான உபகரணமான அமைப்புத் தொகுதி (system unit) வழக்கமாக ஒரு மேசை மேலே அல்லது கீழே வைக்கப்படும் செவ்வகப் பெட்டியாக இருக்கும். திரை (monitor), சுட்டி (mouse), விசைப்பலகை (keyboard) போன்ற பிற உபகரணங்கள் அமைப்புத் தொகுதியுடன் (system unit) இணைக்கப்பட்டிருக்கும்.

**2. மடிக்கணினி - laptop computers**

மடிக்கணினி, மெல்லிய திரையைக் (thin screen) கொண்ட, குறைந்த எடையுள்ள (lightweight) எடுத்துச்செல்லக்கூடிய அளவிலும் இருக்கும். அது சிறிய அளவில் இருப்பதால் பெரும்பாலும் notebook computers

என்றும் அழைக்கப்படுகிறது. மடிக்கணினியை மின்கலத்தில் (batteries) இயக்க முடியும் எனவே நீங்கள் அதை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். மேசைக் கணினிகள் போலல்லாமல் மடிக்கணினியில் CPU, திரை (screen), விசைப்பலகை (keyboard) ஆகியவை ஒரே பெட்டியில் அமைந்திருக்கும். பயன்படுத்தப்படாதபோது அதன் திரை, விசைப்பலகை மேல் மடிக்கப்படும்.

## 3. கையடக்கக் கணினி - handheld computers

கையடக்கக் கணினி (Handheld computers) என்பது மின்கலத்தில் இயங்கும் கணினி (battery-powered computers) – இது personal digital assistants- PDA என்றும் அழைக்கப்படுவதுண்டு. இது சிறிதாக இருப்பதால் இதை எங்கும் கொண்டுசெல்லலாம். கையடக்கக் கணினிகள் (Handheld computers) மேசைக்கணினி அல்லது மடிக்கணினி போல சக்திவாய்ந்தவை அல்ல என்றாலும், அவை சந்திப்புகளுக்குத் திட்டமிடுதல் (scheduling appointments), முகவரிகளையும் தொலைபேசி எண்களையும் (addresses and phone numbers) சேமித்துவைத்தல், கணினி விளையாடுதல் (playing games) போன்றவற்றுக்குப் பயனுள்ளவை. சிலவற்றில், தொலைபேசி அழைப்புகள் (telephone calls) செய்தல், இணையத்தைப் பயன்படுத்துதல் (accessing the Internet) போன்ற மேம்பட்ட திறன்கள் இருக்கின்றன. கையடக்கக் கணினிகளில் விசைப்பலகைக்கு பதிலாகத் தொடுதிரைகள் (touch screens) இருக்கும். இவற்றை விரலால் அல்லது தொடுகோலால் (stylus - பேனா வடிவ சுட்டுக் கருவி) தொட்டுப் பயன்படுத்த வேண்டும்.

## 4.Tablet PC

Tablet PC என்பது மடிக்கணினி (laptops), கையடக்கக் கணினி (handhelds) ஆகிய இரண்டின் அம்சங்களும் இணைந்த செல்லிட PC (mobile PC). மடிக்கணினி போல Tabelt PC சக்திவாய்ந்தது. திரையை உள்ளடக்கிய (built-in screen) வடிவமைப்பு கொண்டது. கையடக்கக் கணினியில் உள்ளது போல் Tablet PC இலும் திரையில் குறிப்புகள் எழுதலாம். (write notes on the screen), படம் வரையலாம் (draw pictures on the screen) இதற்குத் தொடுகோலுக்கு (stylus) பதிலாகப் பெரும்பாலும் tablet pen பயன்படுத்தப்படுகிறது. Tablet PC ஆல் - உங்கள் கையெழுத்தைத் தட்டச்சு செய்து உரையாகவும் மாற்ற முடியும் (converts your handwriting into typed text). சில Tablet PC களில் திரையைச் சுழற்றி அதற்கு அடியில் உள்ள விசைப்பலகையைப் பயன்படுத்தலாம்.


UNITY Computers

UNITY PC SYSTEMS

Colombo : No. 394-1/1 Galle Road, Wellawatta, Colombo 06 | 0112 361 777, 0777 890 532
Jaffna : No. 74, Palaly Road, Illupaiyadi Junction, Jaffna. | 021 222 0666, 077 344 6194






சகலவிதமான கணினிகளின் திருத்த வேலைகள், Net Working மற்றும் அனைத்துவகையான கணினிகளையும் கணினி உதிரிப்பாகங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்...


UNITY PC SYSTEMS

# கடவுச்சொல் கொடுக்காமல் உங்கள் ஜிமெயில் கணக்கை மற்றவர்கள் பயன்படுத்தக் கொடுப்பது எப்படி?


ஜிமெயில் ஆனது ஒரு வெறும் மெயில் அனுப்புதல், பெறுதல் என்ற வசதிகளைத் தாண்டியும் நிறைய வசதிகளை தருகிறது. சில நேரங்களில் ஒரு நிறுவனம், அமைப்பு போன்றவற்றுக்கு ஜிமெயில் மூலம் மின்னஞ்சல் கணக்கு வைத்திருக்கும்போது அதை ஒருவர் மட்டும் கண்காணிக்க முடியாத நிலை வரலாம். அப்போது இன்னும் பலருக்கு கணக்கின் கடவுச்சொல் போன்றவற்றை தந்தால்தான் அவர்கள் பயன்படுத்த முடியும். ஆனால் அது பாதுகாப்பு இல்லை என்று சிலர் நினைப்பது உண்டு. இதுவே கடவுச்சொல் எதுவும் கொடுக்காமல் குறிப்பிட்ட சிலர் உங்கள் கணக்கை பயன்படுத்த அனுமதி கொடுத்தால் நன்றாக இருக்கும் அல்லவா?

இதை ஜிமெயில் மூலம் செய்ய முடியும். இதன் மிகப் பெரிய பலன் நீங்கள் பயன்படுத்த அனுமதி கொடுக்கும் நபருக்கு உங்கள் கணக்கின் கடவுச்சொல் தெரியாது. settings எதையும் மாற்ற இயலாது, chat செய்ய இயலாது. மாறாக அந்த கணக்கிற்கு வரும் மின்னஞ்சல்களை படிக்க முடியும், படித்ததை நீக்க முடியும். உங்கள் கணக்கில் இருந்து மின்னஞ்சல் அனுப்ப முடியும். இதை செய்வது எப்படி என்று பார்ப்போம்.

1. முதலில் உங்கள் ஜிமெயில் கணக்கில் நுழைந்து கொள்ளுங்கள். Settings பகுதிக்கு வரவும்.
2. வரும் பகுதியில் "Accounts and Import" என்பதை சொடுக்கவும். அதில் "Grant access to your account" என்பதற்கு வரவும். அதில் "Add another account" என்பதை கிளிக் செய்யுங்கள்.





இப்போது ஒரு புதிய திரை திறந்து மின்னஞ்சல் முகவரி கேட்கும். யாருக்கு அனுமதி தருகிறீர்களோ அவர் மின்னஞ்சல் முகவரி தந்து விடவும். அடுத்த பக்கத்தில் "Send Email to Grand Access" என்பதை கொடுத்து விடவும்.




இப்போது உங்கள் நண்பரிடம் சொல்லி அவருக்கு வந்துள்ள மின்னஞ்சலை Accept செய்ய சொல்ல வேண்டும். மின்னஞ்சல் கீழே உள்ளது போல இருக்கும்.

இதை சொடுக்கி அரை மணி நேரத்தில் அனுமதி வசதி கிடைத்து விடும். அனுமதி பெற்ற நபர், அவர் மின்னஞ்சல் கணக்கில் நுழைந்து வலது மேல் மூலையில் அவர் பெயர் மீது கிளிக் செய்தால் அதற்கு கீழே அனுமதி பெற்ற மின்னஞ்சல் கணக்குக்கு செல்வதற்கான வழி இருக்கும்.




இதில் இரண்டாவதாக மின்னஞ்சல் முகவரி உடன் Delegated என்று உள்ளது தான் அனுமதி கிடைத்துள்ள மின்னஞ்சல் முகவரி. இதை சொடுக்கி அவர் உங்கள் மின்னஞ்சல் கணக்கில் நுழைந்து விடலாம். கடவுச்சொல் தேவை இல்லை.

4. உங்கள் கணக்கில் இருந்து அவர் மின்னஞ்சல் அனுப்பும் போது, அதை பெறுபவருக்கு உங்கள் மின்னஞ்சல் முகவரி உடன், அவரது மின்னஞ்சல் முக1வரியும் சேர்ந்து செல்லும்.


From, Sent By என்று இரு பகுதிகள் இருப்பதை காணலாம். இதன் மூலம் அவர் மின்னஞ்சல் கணக்கை தவறாக கையாள முடியாது.

இதில் ஜிமெயில் கணக்கு உள்ள இன்னொரு நண்பரை மட்டுமே சேர்க்க முடியும். மற்றும் இதர மின்னஞ்சல் சேவையை பயன்படுத்தும் நண்பர்களையும் சேர்க்க முடியாது.

இப்போது உங்கள் மின்னஞ்சல் கணக்கில் "You have granted access to your account to @gmail.com. This notice will end in 7 days." என்று இருக்கும். இதைப் பற்றிய கவலை வேண்டாம்.

# இணையம்

## அறிந்து கொள்வோம்



உலகின் மிகப் பெரிய கணினி வலையமைப்பாக இணையம் விளங்குகிறது. உலகிலுள்ள 170 ற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபித்துள்ள ஏராளமான அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்ந்த கணினி வலையமைப்புகள் இணையத்தில் இணைந்துள்ளன.

ஓரிடத்திலிருந்து உலகின் மற்றுமொரு இடத்திற்கு கணினியூடாக கோப்புக்களின் பரிமாற்றம் மற்றும் தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடிய ஒரு பாதையாகவே இணையம் செயற்படுகிறது. கண்டத்திற்குக் கண்டம் நாட்டுக்கு நாடு வியாபித்திருக்கும் இந்தக் கணினி வலையமைப்பு அதி வேகம் கொண்ட கம்பியை கொண்டு இணைக்கப்பட்டுள்ளன. இதனை Internet Backbone என்கிறோம்.

பல்வேறு வகையான பல்வேறு அளவுகளைக் கொண்ட பல்வேறு இயங்குதளங்களைக் கொண்ட ஆயிரக் கணக்கான கணினிகள் இணையத்தில் நிரந்தரமாக இணைந்துள்ளன.

பல்வேறு வகையான கணினிகள் இணையத்தில் இணைந்துள்ள போதும் அவற்றிற்கிடையே TCP / IP (Transmission Control Protpcol / Internet Protocol) எனும் பொதுவான ஒரு விதிமுறை பின்பற்றப்படுவதன் காரணமாக நாம் எந்த ஒரு கணினியிலிருந்தும் மற்றுமொரு கணினியுடன் இலகுவாகத் தொடர்பாட முடிகிறது.

இராணுவ தேவைக்காக அமெரிக்காவினால் 1969ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு கணினி வலையமைப்பே பின்நாளில் இணையமாக உருவெடுத்தது. ஆரம்பத்தில் இந்தக் கணினி வலையமைப்பு ARPANET என அழைக்கப்பட்டது.

தற்போது இணையத்தின் உரிமையாளராக எந்த ஒரு நாடோ நிறுவனமோ இல்லை எனினும் இணையத்தின் வளர்ச்சிக்காகவும் இணையத்தில் விதிமுறைகளை நிர்ணயிக்கவும் முறைப்படுத்தவுமென சில தன்னார்வ நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.


இணையத்தின் மூலம் கிடைக்கும் சில பொதுவான பயன்பாடுகளாக எந்தவொரு விடயம் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், மின்னஞ்சல் சேவை, நிகழ் நேரத்தில் ஒருவரோடொருவர் உரையாடுதல், கோப்புக் களையும் மென்பொருள்களையும் பரிமாறிக் கொள்ளல், இசை, திரைப்படம், விளையாட்டு என பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடல் பொருட்கள் மற்றும் சேவை களைப் பெறுதல் விற்பனை செய்தல் மூலம் இணைய வணிகத்திலீடுபடல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

இணையம் சார்ந்த சில கலைச்சொற்களையும் அவற்றுக் கான விளக்கத்தையும் பார்ப்போம். Asymmetric Digital Subscriber Line (ADSL): அதி வேக இணைய வசதியை வழங்கும் ஒரு இணைய இணைப்பு முறை.

**Blog:** web Log என்பதன் சுருக்கமே Blog. இது online Journal எனப்படுகிறது. இது இணைய தளம் போன்றதே. இணைய தள வடிவாக்கம் பற்றி அறியாதவர்கள் கூட இதனை இலகுவாக உருவாக்கலாம். இந்த சேவையை Blogspot.com, wordpress.com என்பன இலவசமாக வழங்குகின்றன.

**Browser:** இணைய சேவைகளில் ஒன்றான உலகளாவிய வலைத் தளமான www ஐ அணுகுவதற்குப் பயன்படும் மென்பொருளையே இணைய உலாவி என்கிறோம். உதாரணம் : Google Chrome, Internet Explorer, Mozilla Firefox.

**Download :** இணையத்தில் அல்லது ஒரு வலைய மைப்பில் இணைந்துள்ள ஒரு கணினியிலிருந்து எமது கணினிக்கு கோப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்வதை தரவிறக்கம் என்கிறோம்.




**Domain Name:** இணையத்தில், இணைந்துள்ள கணினிகளை அல்லது இணையத் தளங்களை இலகுவாக நினைவில் வைத்துக்கொள்ளும் வண்ணம் IP முகவரி எனும் இலக்கங்களுக்குப் பதிலாக சொற்களைப் பயன்படுத்தும் முறையை Domain Name எனப்படுகிறது.

**Dial-up:** இணையத்தில் இணைவதற்குப் பலரும் நாடும் ஒரு பொதுவான இணைப்பு முறை. இணைய சேவை வழங்கும் நிறுவன கணினியை ஒரு Modem ஐ பாவித்து தொலைபேசிக் கம்பியூடாக இணைக்கப்படும். அதிக பட்சமாக 128 kbps அளவிலான வேகத்தையே கொண்டிருக்கும். இந்த முறை தற்போது பாவனையில் இல்லை.

**E-mail (Electronic mail):** கணினி வலையமைப்பில் அல்லது இணையத்தில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு பிரபலமான இணைய சேவையே மின்னஞ்சல் ஆகும். மின்னஞ்சல் அனுப்பவும் பெறவும் ஒரு மின்னஞ்சல் முகவரி அவசியம். ஒரு மின்னஞ்சல் முகவரி infi@computertoday.com என்னும் வடிவில் இருக்கும். இங்கு பயனர் பெயரும் domain பெயரும் @ எனும்குறியால் பிரிக்கப்படும்.

**Extranet:** ஒரு நிறுவனம் சார்ந்த கணினி வலையமைப்பு. இது இணையத்தோடு தொடர்புபட்டிருக்கும். அந்நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மட்டு மன்றி பொது மக்களும் உரிய பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லோடு இதனை அணுக முடியும்.




**FTP:** (File Transfer Protocol) இணையம் வழியே பெரிய அளவிலான கோப்புக்களையும் மென்பொருள்களையும் பரிமாறிக்கொள்ளும் சேவையை FTP எனப்படுகிறது.


**File attachment :** மின்னஞ்சலுடன் இணைத்து அனுப்பப்படும் சிறிய ஆவணங்கள் மற்றும் படங்கள் attachment எனப்படுகிறது.

**Firewall :** இணையத்தைப் பயன்படுத்தி எமது கணினிக்குள் அனுமதியின்றி எவரும் ஊடுருவாமல் தடுக்கும் மென்பொருளை Firewall என்கிறோம்.

**Hyperlink :** இணைய தளமொன்றில் ஒரு பக்கத்திலிருந்து மற்றுமொரு பக்கத்திற்கு அல்லது வேறொரு இணைய தளத்திற்கு வழங்கப்படும் இணைப்பை Hyperlink எனப்படுகிறது.

**HTTP (Hypertext Transfer Protocol) :** உலகளாவிய வலைத்தளத்தில் HTML ஆவணங்களை அனுப்பவும் பெறவும் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான விதி.

**HTML (Hypertext Mark\up Language):** வலைத்தளங்களை உருவாக்கப் பயன்படும் ஒரு கணினி மொழி.




**Home Page :** ஒரு இணைய தளத்தின் முதல் பக்கத்தை அல்லது இணைய உலாவி திறக்கும் போது வரும் முதல் பக்கத்தை Home Page எனப்படுகிறது.

**Hacker :** ஒரு கணினி வலையமைப்பில் அல்லது இணையத்தில் இணைந்துள்ள ஒரு கணினியின் பாதுகாப்பு ஓட்டைகளை நன்கறிந்து அக்கணினியினுள் அனுமதியின்றி நுழையும் ஒரு கைதேர்ந்த நபர் ஹெக்கர் (குறும்பர்) எனப்படுகிறார். பாதுகாப்புத் தன்மையைப் பரீட்சிப்பதற்காகவும் ஹெக்கர்களின் உதவியை நாடுவதுண்டு.

**Instant Message (IM) :** இணையத்தைப் பயன்படுத்தி நிகழ் நேரத்தில் இருவருக்கிடையில் நிகழ்த்தப்படும் உரையாடலை உடனடி செய்திச் சேவை எனப்படுகிறது.

**Internet Service Provider (ISP) :** இணைய சேவை வழங்கும் நிறுவனத்தையே ISP எனப்படுகிறது. நமது கணினியை இணையத்துடன் இணைக்கும்போது இந்த நிறுவனத்தின் கணினியூடாகவே நம் இணையத்தில் இணைகிறோம்.

**IP (Internet Protocol) address :** இணையத்தில் அல்லது ஒரு வலையமைப்பில் இணைந்துள்ள ஒவ்வொரு கணினியையும் வேறுபடுத்திக் காட்டும், ஒரு இலக்கமே IP முகவரி எனப்படுகிறது. இது நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும். (உதாரணம் : 169, 254, 222.1) ஒவ்வொரு பகுதியும் 0 முதல் 255 வரையிலான இலக்கங்களைக் கொண்டிருக்கும்.

**ISDN (Integrated Services Digital Network):** Dial Up, ADSL போன்று ஒரு வகை இணைய இணைப்பாகும். இது Dial Up விட வேகமானது. ADSL ஐ விட வேகம் குறைந்தது. இது ஒரு Digital சேவை என்பதால் Modem அவசியமில்லை.

**Intranet :** ஒரு நிறுவனம் சார்ந்த கணினி வலையமைப்பு. நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களால் மட்டுமே இதனை அணுக முடியும். இது இணையத்தோடு தொடர்பு பட்டுமிருக்கலாம். தொடர்புபடாமலும் இருக்கலாம். எனினும் பொது மக்கள் யாரும் இந்த வலையமைப்பை அணுக முடியாது.

**Modem:** Analog வடிவில் தரவை ஒரு கணினியிலிருந்து மற்றுமொரு கணினிக்கு தொலைபேசிக் கம்பியூ டாக அனுப்புவதற்கு Modem எனும் சாதனம் பயன்படுத் தப்படுகிறது. இது Digital வடிவிலுள்ள தரவை (analogue) analog ஆகவும் (modulation) analog வடிவிலுள்ளதை digital (demodulation) வடிவிலும் மாற்றுகிறது.

**Offline:** கணினி இணையத்தில் இணைந்திராத சந்தர்ப்பத்தை Offline எனப்படுகிறது.

**Online:** இணையத்தில் எமது கணினி இணைந்திருக்கும் போது கணினி Online இல் இருப்பதாகச் சொல்லப்படும்.

**Password:** ஒரு கோப்பை, கணினியை அல்லது வலையமைப்பை அதிகாரமளிக்கப்பட்டவர்கள் மாத்திரம் அணுகுவதற்குப் பயன்படும் எழுத்துக்கள் மற்றும் எண்களைக் கொண்ட ஒரு ரகசிய சொல்.

**Portal:** மின்னஞ்சல், தேடற்பொறி, போன்ற பல வகைப் பட்ட சேவைகளை வழங்கும் ஒரு இணையதளத்தை குறிக்கிறது.

**Server :** ஒரு வலையமைப்பில் தனது வளங்களையும் தகவல்களையும் ஏனைய கணினிகளுடன் பகிர்ந்து கொள்ளும் கணினிகளை Server அல்லது Host எனப் படுகிறது.

**Search Engine:** world wide web எனும் உலக ளாவிய வலையமைப்பில் எமக்குத் தேவையான தகவல் கள் எந்த வலைத்தளங்களில் உள்ளன என்பதை தேடிப் பட்டியலிடும் மென்பொருளையே தேடற் பொறி எனப் படுகிறது. உதாரணம் : www.google.com, www.yahoo.com, www.bing.com

**Sub Domain:** domain பெயரில் ஒரு பகுதியே sub domain எனப்படுகிது. உதாரணமாக exam.computertoday.lk, என்பதில் computertoday என்பது பிரதான domain எனவும் exam என்பது sub domain எனவும் அழைக்கப்படுகிறது.

**Spam :** எமக்குத் அறிமுகமில்லாத நபர்களிடமிருந்து நாம் கேட்காமலேயே எமது மின்னஞ்சல் முகவரிக்கு வந்து சேரும் வேண்டாத (குப்பை) மின்னஞ்சல்களையே Spam எனப்படுகிறது.


**Top-level domains:** domain name system எனப்படும் இலக்கங்களுக்குப் பதிலாக சொற்களைப் பயன்படுத்தும் முறையில் ஒரு பிரதான பிரிவே Top-level domains எனப்படுகிறது. உதாரணம் .com, .gov, .edu.

**Uniform Resource Locator (URL):** உலகளாவிய வலைத்தளத்தில் உள்ள ஒரு ஆவணத்தின் முகவரி யைக் குறிக்கிறது. இதனையே web address எனவும் அழைக்கப்படுகிறது.

**Upload :** இணையத்தில் அல்லது வலையமைப்பொன்றில் ஒரு கணினியிலிருந்து மற்றுமொரு கணினிக்கு கோப்பு ஒன்றை அனுப்புவதை Upload எனப்படுகிறது.

**World Wide Web:** Hyper Text ஆவணங்களையும் தரவுத் தளங்களையும் கொண்ட இணைய சேர்வர்களையே World Wide Web (உலகளாவிய வலைத்தளம்) எனப்படுகிறது- இது 1989 ஆம் ஆண்டு Tim Berners-Lee, எனும் பிரித்தானியரால் வடிவமைக்கப்பட்டது.

**Website:** HTML எனும் வலை மொழி கொண்டு உருவாக்கிய, Hyper Text ஆவணத்தையே இணையதளம் எனப்படுகிறது. இந்த ஆவணம் ஒரு நிறுவனம் சார்ந்த அல்லது தனி நபர் சார்ந்த அல்லது ஏதோவொரு விடயம் சார்ந்த தகவல்களைக் கொண்டிருக்கும். இது ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பக்கங்களையோ (web pages) கொண்டிருக்கும். இவை Hyperlink கொண்டு இணைக்கப்பட்டிருக்கும். இதனை இணையத்தில் இணைந்திருக்கும் ஒரு web server இல் சேமிக்கப்படும். அந்த இணைய தளத்திற்கெனப் பதிவுசெய்யப்படும் பெயரைக் கொண்டு (web address) கொண்டு அந்த தளத்தை உலகின் எப்பாகத்திலிருந்தும் அணுகலாம்.



# நுளம்பினை

## துரத்த அன்ரொயிட்டில் ஒரு புதிய பயன்பாடு

உலகம் மொத்தமும் smart phone இற்குள் அடங்கிவிட்டது என்று சொன்னால் அது மிகையில்லை. அந்த அளவுக்கு அனைத்து வசதிகளும் செல்பேசியில் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளன. தற்போது இது இன்னும் ஒருபடி மேலே சென்று நுளம்பினை துரத்துவதற்குக் கூட பயன்பாடுகள் வந்துவிட்டது.

தற்போது விற்பனையாகி வரும் பல்வேறு நுளம்பு விரட்டிகளாலும் நுளம்புகளை கட்டுப்படுத்த முடிவதில்லை என்று சிலர் புலம்புகிறார்கள். மேலும் அதில் இருந்து கிளம்பும் புகை சுற்றுச்சூழலை மாசுபடுத்துகிறது. இந்த புகை சிலருக்கு ஒவ்வாமையையும் ஏற்படுத்துகிறது.

தற்போது அந்த பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. அமெரிக்க நிறுவனம் தயாரித்துள்ள “Mosquito Repellent” என்ற பயன்பாட்டை தரவிறக்கி உங்கள் செல்பேசியில் நிறுவி இயக்கினால், அதில் இருந்து வெளியாகும் உயர் அதிர்வெண் கொண்ட ஒலி அலைகள் நுளம்புகளை ஓட ஓட விரட்டி விடும்.

நுளம்புகளுக்கு பிடிக்காத இந்த அல்ட்ரா சவுண்டால் நுளம்புகள் நமக்கு அருகில் கூட வராது. அதே போல் எம் டிராக்கர் என்ற பயன்பாட்டின் மூலமாக பல்வேறு பூச்சி தொல்லைகளில் இருந்தும் விடுபடலாம். நுளம்பு விரட்டி வெளியிடும் சத்தம் நமக்கு இம்சையாக காதில் ஒலிக்காது. காதின் அருகே செல்போனை வைத்து கேட்டால் மட்டுமே ஒலி கேட்கும்.

நுளம்புகளுக்கு காதுகள் இல்லை என்ற போதிலும், ஒலி அதிர்வை நுளம்புகளால் கண்டுபிடிக்க முடியும். ரயில் நிலையம், பஸ் நிலையம் போன்ற பொது இடங்களிலும், வெளியிடங்களிலும் நுளம்பு தொல்லை அதிகமாக இருந்தால், செல்பேசியை எடுங்கள், பயன்பாட்டை இயக்கி விடுங்கள். இது உண்மையிலேயே வேலை செய்கிறதா இல்லையா என்பதை பார்ப்பது பெரிய சிரமமில்லை. ஏனெனில் இதை இலவசமாக தரவிறக்கிக்கொள்ள முடியும்.

தரவிறக்க சுட்டி : https://www.torrapk.com/en/apps/36-sport-and-health/450-Anti-Mosquito-Ultra-Repellent

# தமிழ் FM இல் வாரநாட்களில்

மாலை 3 மணி முதல் 5 மணி வரை

பொது அறிவு, தகவல் தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், அறிமுகங்கள் இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களுடன் ஒலிபரப்பாகும்,

## ‘ஆறாம் அறிவு’

நிகழ்ச்சியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்து ‘கம்ப்யூட்டர் ருடே’ வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்!

தமிழ் FM முத்தமிழின் மூச்சுக்காற்று

யாழ்ப்பாணம் 99.7 FM
வன்னி 99.5 FM
நாடு முழுவதும் 107.3FM
www.tamilfm.lk


| பெயர் | முகவரி |
|---|---|
| வியஜலக்சுமி பாலசிங்கம் | சங்கானை |
| சதாநந்தன் | சிலாபம் |
| சோமசுந்தரம் சகுந்-தலாதேவி | புதுகுடியிருப்பு |
| கதிர்காமநாதன் நிலக்கசன் | கல்முனை |
| கோபிகா விக்க-ினேஸ்வரன் | காரைநகர் |
| முத்துமாயன் | இந்தியா |
| சத்யயோதி | அளவெட்டி |
| ஆசைத்தம்பி | பெலேகட்ருவ |
| கணேஸ் | உரும்பிராய் |
| தீணேஸ் | பசற |
| லதா ஆனந் | நுவரேலியா |
| நவறாஜனி | காரைதீவு |
| கணேசகரன் சஜீபன் | விசுவமடு |
| திவ்யசோபனா | போகன்ந்தலாவ |
| விமலேந்திறன் ராகுல் | மட்டக்களப்பு |
| கண்ணண் | மட்டக்களப்பு |
| கிருஸ்ணமேனன் சிவராஜினி | அகராபத்தன |

| பெயர் | முகவரி |
|---|---|
| கௌதமன் | சுன்னாகம் |
| முனிப் அகமட் | வறாக்காபொல |
| பளனிநாதன் நிவேதன் | மிசாலை |
| மணிமேகலை வரதராஜன் | கல்லடி-மட்டக்களப்பு |
| மும்ராஜ் அனவர் | பண்டாரவள |
| வினோத் | கல்லடி |
| நவராஜனி | காரைதீவு அம்பாறை |
| நேதிராஜ் | மருதனார் மடம் |
| ஜனார்தனன் ரம்யா | கிளிநொச்சி |
| ருகாய்யா | கொழும்பு |
| சாந்தா | நல்லூர் |
| ராமதாஸ் சன்திதாஸ் | கண்டப்பொல |
| பிரணவருபன் எழியினி | சுழிபுரம் |
| பிரேமவதி | பண்டத்தரிப்பு |

SUCCESS THROUGH KNOWLEDGE

IIS CITY CAMPUS



## The world opportunities awaits for you.... Study at IIS City Campus


பட்டதாரி ஆகவேண்டும் என்ற உங்கள் கனவை நனவாக்கி கொள்ளுங்கள்

# பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்ட மாணவர்களே!

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

# BTEC HND in

- Computing & Systems Development
- Business Management
- Construction and the Built Environment (Civil Engineering)
- Quantity Surveying




Leading to

## BSc (Hons)


Contact no: 021 222 8060
Website :www.iis.edu.lk
e-mail : info@iis.edu.lk

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road,
Jaffna

நீங்களும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற **Nework Engineer** ஆவதற்கு **WinSYS Networks** வழங்கும் ஓர் வாய்ப்பு!!!!

- Certificate In Hardware
- Certificate In Networking
- Microsoft - MCSA
- Cisco - CCNA
- Linux Administration
- B.Sc (Hons) Computer Systems & Networking
- Android Apps Development
- Server Virtualization
- Vmware vSphere 6.0
- PHP & MYSQL
- Web Engineering




**cctv** துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் வாய்ப்பு





- ஒரு நாள் செயன்முறை பயிற்சி நெறி
- 4 நாட்கள் வதிவிட பயிற்சி நெறி



- உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்
- இலவசமாக கருவிகள் வழங்கப்படும்
- **WinSYS** இனால் அங்கீகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ்

# SPECIAL OFFERS

**CCNA + MCSA**
**Both : LKR 25,000**

**Hardware + Networking**
**Both : LKR 10,000**

## Why WinSYS ?

* 12 வருடஅனுபவம்வாய்ந்த ஆசிரியர் குழாம்
* தொழிற்துறை அனுபவம் வாய்ந்த வல்லுனர்கள்
* குறைந்த கட்டணம்
* **Real Equipments** இனால் பயிற்சி ணவழங்கப்படும்

# Hello : 0777-825789

CISCO. Microsoft Partner vmware Linux android CITRIX php MySQL

# WinSYS NETWORKS®

*The network security training provider of the nation*

**#14, Schofield Place, Kollupitiya, Colombo-03**
**Tel : 011-2589567 | 011-2589568 | 0777-259927**
**www.winsys.lk | info@winsys.lk**

**BRANCHES**

**Kandy : 0777-047708**
**Batticaloa : 0777-832871**
**Jaffna : 0773-013060**